MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES

To Discern the Truth is Wisdom– Half yearly Journal

Vol.2: Issue.1, January 2025

ISSN : 3048-7854

Editor

Dr R.Manimekalai

Vol.2: Issue.1, January 2025

ISSN : 3048-7854

MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES

To Discern the Truth is Wisdom– Half yearly Journal

Editor-in-Chief

Dr. R.Manimegalai
Associate Professor & Head
Department of Tamil
PSGR Krishnammal College for Women
Coimbatore – 641004
Ph: +919894439821, E-Mail : manimekalair@psgrkcw.ac.in

Associate –Editors

Dr. V.Meenakshi
Assistant Professor
Department of Tamil
Bishop Heber College
Tiruchirappalli – 620017
Ph: +919790382356,
E-Mail : meenakshi.tm@bhc.edu.in

Dr A.Manonmani Devi
Assistant Professor
Department of Languages and Communication
Sultan Idris Education University
Tanjong Malim – 39500, Perak, Malaysia
Ph: +60164722944
E-Mail : manonmanidevi@fbk.upsi.edu.my

Mr. S.Chandrakumar
B.A. Hons, (EUSL), M.A (EUSL), M.Phil (EUSL),
PGDE (OUSL)
Senior Lecturer - Gr I
Department of Fine Arts
Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka
Ph: +9477 666 1495
E-Mail : chandrakumars@esn.ac.lk

Dr. N. Gayathri
Associate Professor
Department of Tamil
PSGR Krishnammal College for Women
Coimbatore – 641004
Ph: +919486331167,
E-Mail : ngayathri@psgrkcw.ac.in

Dr C.Nandhini Devi
Assistant Professor
Department of English
National College
Tiruchirappalli - 620001
Ph: +919894211698
E-Mail : nandhinidevi@nct.ac.in

Masivan Pathippagam,
3/199, A.Gudalur, Ayandur Post, Kandachipuram TK, Villupuram – 605755
+919486069548, editor@masivan.in

© Copyright to SEKA: JOURNAL OF MULTIDISCIPLINARY STUDIES 2024 • All Rights Reserved •

Index

S.No	Title & Author	Pages
1	Mechanisms of Power and Repression in Kongu Regional Innovations **Aruna.R**	01
2	21st Century Tamil and Power Politics **Chinnasamy.P**	09
3	The Food Culture of the Tamils and Some Understanding **Kavitha.P, Rajendran.N**	15
4	Pathikam and Payiramarabu Tradition in Tamil **Mallika.V**	25
5	Biological elements in Porunaratruppadai **Thilagavathi.A, Prem Kumar R**	30
	Social Status During The Times of Sangam Female Poets Anchil Anjiyaar and Varumulaiyaaraththiyaar **Vasanthi V**	40

படி நிலைச் சமுதாயம் உடைபடும் தருணம் நோக்கி

மனித சமுதாய வாழ்வைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களின் ஊடாக அவை நிறுவனப்படுத்தப்படுதலும், அதற்கான அதிகார அரசியலைப் பதிவு செய்தலும் தொடர்ந்து நிகழும் அதே வேளையில், இவற்றுக்கு எதிரான போர்க்குரலை எழுப்புதலும் தொடர்ந்து நிகழ்ந்தேறிய வண்ணமே இருக்கின்றது. கொங்கு வட்டார புதினங்களில் அதிகார இயந்திரங்களும் அடக்கு முறைகளும் என்ற கட்டுரையானது இந்தியச் சமூகத்தில் சாதியப்படி நிலை எவ்வாறு மேற்கொண்டு வியாபித்துள்ளது என்பதைச் சங்ககாலச் சமுதாயம் தொட்டு இன்றைய சமுதாயம் வரை விரிவாக விளக்குகிறது. கொங்கு வட்டார புதினங்கள் வெளிப்படுத்தும் அதிகார அரசியல், சாதிய வன்முறை முதலானவற்றை விளக்கும் போது விளிம்பு நிலை சாதிகளின் தன்னுணர்வு மனநிலை மேல் ஏழாதவாறு அடக்கு முறைக்கு ஆளாக்குகிறது என்று கூறும் கருத்து உற்று நோக்கத்தக்கது. உரத்த குரல் அதிகாரத்துக்கு ஒவ்வாதது, மரியாதை அற்ற வார்த்தைகள் அதிகாரத்தை எதிர்ப்பதற்குச் சமமானது என்பன போன்ற கருத்துக்கள் அதிகாரமயமாதலை தெளிவாக விளக்குகின்றன. இத்தகைய அதிகார மையம் நோக்கி விளிம்பு நிலை மனிதர்கள் நகரும்போதே இந்த அதிகாரம் விளிம்பு நிலை மனிதர்களுக்கு உடைக்கப்படுகிறது என்பதே இன்றைய நிலைப்பாடு.

ஏற்றத்தாழ்வுகளை வேக நுணுக்கமாக கட்டமைத்த நமது சமுதாயத்தில் மொழியின் அரசியல் அளப்பரியது. ஆண் பெண் சரிபாதியாக வாழும் தமிழ்ச் சூழலில் பெண்ணுக்கான மொழி என்பதை இரண்டாம் நிலையா? என்பதை உட்படுத்த வேண்டிய சூழல் உள்ளது. மேலும் பெண் வலிமை ஆண் சமுதாயத்திற்கும் இளைய சமுதாயத்திற்கும் உணர்த்தப்பட வேண்டியது அவசியம். இதற்கான முயற்சி தொடர வேண்டும். மேலும் தன்மொழி வழி கற்றல் என்பது மனித சமுதாயத்தை உயர்த்தும் என்பதும் உணர்த்தப்பட வேண்டியதே. தமிழ்ச் சூழலில் மனித மனம் பண்பட இலக்கியங்கள் முன்வைக்கும் மொழியும் உடல் நலம் பெற அவை கூறும் வழக்காறுகளும் பெரும் பங்களிக்கின்றன. இவற்றை ஆய்வுக்குட்படுத்தி மறுவாசிப்புச் செய்து மனித சமுதாயம் மேம்பட பயன்படுத்த வேண்டியது இன்றைய காலத் தேவை.

பதிப்பாசிரியர்

கொங்கு வட்டாரப் புதினங்களில் அதிகார இயந்திரங்களும் அடக்குமுறைகளும்

1

Mechanisms of Power and Repression in Kongu Regional Innovations

அருணா.ரா, தமிழ்த்துறை, பூ.சா.கோ.அர. கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்

Aruna.R, Department of Tamil, P.S.G.R. Krishnammal College for Women (Autonomous), Coimbatore.

ORCID: https://orcid.org/0009-0003-2364-4124

DOI: 10.5281/zenodo.14719808

Abstact

Caste is established as a part of society. Human society depends on it for movement, even if it is not included in open discourse today. Although the idea that living and non-living things are one in the balance of nature has been taught, the ideology that human society is superior continues to gain momentum. The moment human society refuses to realize that nature is superior to man, the balance of nature is disturbed. In Indian society, the hierarchies between human societies divide political human sentiments. Caste ideology has a major impact on this division even today. In this the Kongu region is identified by the Sangha literature as a suitable terrain with Kurinji and Mullai lands. Marut land-based livelihood values are minimal. But in the Maruta land-based lifestyle, the dominant society that has constructed land as a form of power has been establishing itself as a symbol of the Kongu region. It can be seen that modern literary forms have been formed and developed in the presence of the dominant X margin. In this, it can be seen that the dominant caste is taking advantage of the machinery of power to maintain their position of power and expressing monopolistic power oppression on the lives of the marginalized. This article seeks to explain the power politics that take place between this dominance X margin.

ஆய்வுச் சுருக்கம்

சாதியம் என்பது சமூகத்தின் அங்கமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. தற்காலத்தில் அது வெளிப்படையான பேச்சுகளுக்குள் உட்படுத்தாவிட்டாலும் அதைச் சார்ந்துதான் மனித சமூகம் இயக்கம் கொண்டுள்ளது. இயற்கைச் சமநிலையில் உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்தும் ஒன்று என்ற சிந்தனை போதிக்கப்பட்டு வந்தாலும் மனித சமூகம்தான் உயர்ந்தது என்ற சித்தாந்தம் தொடர்ந்து இயக்கம் பெற்று வருகிறது. மனிதனை விட இயற்கை மேலானது என்பதை மனித சமூகம் உணர மறுக்கும் தருணத்திலிருந்துதான் இயற்கை சமநிலை சீர்குலைக்கப்படுகிறது. இதில் இந்திய சமூகத்தில் மனித சமூகத்திற்கிடையில் நிலவும் படிநிலை அரசியல் மனித உணர்வுகளைப் பிரித்தாளுகிறது. இந்தப் பிரிவினையில் இன்றளவும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவது சாதியக் கருத்தியலாகும். இதில் கொங்கு வட்டாரம் என்பது குறிஞ்சி, முல்லை நிலங்களால் தகவமைந்த நிலப்பரப்பாக சங்க இலக்கியங்கள் அடையாளப்படுத்துகின்றன. மருத நிலம் சார்ந்த வாழ்வியல் விழுமியங்கள் குறைந்த அளவுதான் காணக்கிடக்கின்றன. ஆனால் மருத நிலம் சார்ந்த வாழ்வியலில் நிலத்தை அதிகார வடிவமாகக் கட்டமைத்துக்கொண்ட ஆதிக்கச்சாதி சமூகம், கொங்கு வட்டாரத்தின் அடையாளமாக நிலைநிறுத்தி வருகிறது. அதில் ஆதிக்கம் X விளிம்பு என்ற நிலையில் நவீன இலக்கிய வடிவங்கள் உருப்பெற்று வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது. இதில் ஆதிக்கச் சாதி தங்களது அதிகார இருப்பைத்

தக்கவைத்துக்கொள்ள அதிகார இயந்திரங்களை சாதகப்படுத்திக்கொள்வதும் விளிம்பு நிலையினரின் வாழ்வியல் மீது ஏகபோத அதிகார அடக்குமுறைகளை வெளிப்படுத்திக் கொள்வதிலும் இயக்கம் பெற்று வருவதைக் காணமுடிகிறது. இந்த ஆதிக்கம் X விளிம்பு என்பதற்கிடையில் நிகழும் அதிகார அரசியலை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

Keywords: *Caste, Gender, Kongu, Innovations, Man, Oppression*, சாதியம், பாலினம், கொங்கு, புதினங்கள், மனிதன், அடக்குமுறை

முன்னுரை

இன்றைய பின்காலனியச் சூழலில் அதிகாரத்திற்கு எதிரான கலகக் குரல்கள் எழுப்பப்பட்டு வந்தாலும் அதிகாரக் கருத்துருவ வடிவங்களை அடையாளங்கண்டு உடைப்பது பெரும் சவாலாக உள்ளது. சாதி, மத, இன, மொழி, பாலின அடிப்படைவாத சிக்கலுக்குள் சிக்குண்ட சமூகத்தில் அடிமை என்பதையே தற்பெருமையாய் பறைசாற்றிக் கொள்ளும் மனநிலை வளர்ந்துள்ளது. சாதி என்பது காலகட்டத்திற்கு ஏற்ப பரிணாமம் அடைந்துள்ளது. அது எப்பொழுதும் பிரித்தாளும் சூழ்ச்சியை நடைமுறைப்படுத்திக் கொண்டே இருக்கும் மரபாகத் தொடர்கிறது. இந்த மரபு, கருத்துருவங்களாகச் சமூகத்தில் நிலைபெற்று, ஆதிக்கமையப் புனைவாக்கங்களாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. அவை அடையாள உருவாக்கத்தையும் மறுதலையான அடையாள இழப்பையும் உட்செறித்துள்ளன. அவ்வகையில், கொங்கு வட்டாரப் புதினங்களில் கருத்துருவங்களின் வழி, கட்டியெழுப்பப்பட்டுள்ள புனைவாக்கங்களையும் அடையாள அரசியலையும் ஆராயும்விதமாக,

1. **அதிகார இயந்திரங்கள், அடக்குமுறைகள்**
2. **சாதிய வன்முறைகள்**
3. **பொதுப்போக்குவரத்தும் அதிகாரச் சிக்கலும்**
4. **அடக்குமுறைகளை நிகழ்த்தும் ஆதிக்க மனம்**

என்ற பொருண்மைகளை முன்வைத்து இக்கட்டுரை ஆராய்கிறது.

அதிகார இயந்திரங்கள், அடக்குமுறைகள்

சாதியம் என்பது சமூக உண்மையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதை மீறுதல், சமூகத்திலிருந்து விலகுதல் அல்லது புறம்பான செயல்களில் ஈடுபடுதல் என்பதாகப் பொருள் கொள்ளப்படுகிறது. சாதியம், புனிதம் X தீட்டு என்ற கட்டுமானத்தில் படிநிலைத்தன்மையுடன் அதிகாரத்தை இயக்குகிறது. தனக்குக் கீழான சாதியை நிறுவிக் கொள்வதில் அது தன்னை நிர்வகித்துக் கொள்கிறது. இந்த நிர்வாகத்திறமையை உருவாக்கிக் கொடுத்தலில் அபரிமிதமான பங்கு ஆரியப் பண்பாட்டுக் காலனியத்திற்கு உண்டு.

பார்ப்பனியச் சமூகத்தைப் போலச்செய்தலின் வழியாக நிலவுடைமைச் சமூகம் படிநிலை அதிகாரத்தை கட்டியெழுப்பிக் கொண்டது. சாதிய அதிகாரம் உடைபடும் போதெல்லாம் அதை மீட்டுருவாக்கம் செய்துகொள்ளும் அருஞ்செயல்பாட்டை இவை மேற்கொள்கின்றது. இங்கு ஆதிக்கத்தை எதிர்த்தல் சமூகப் பண்பாட்டை எதிர்த்தலாக வரையறுக்கப்படுகிறது. இதில் விளிம்புநிலை மக்கள் முகமற்றவர்களாக இயக்கம் கொள்வதை, "ஆதிக்கச் சாதி மனிதன் பணம், அதிகாரம், அந்தஸ்து பரம்பரைப் பெருமை, வறட்டு கௌரவம், முரட்டுப் பிடிவாதம் என்ற புறநிலை உருவாக்கும் குணங்களுக்குள் சிக்கிக் கிடப்பதைப் போல, தாழ்த்தப்பட்டவர்கள், ஒதுங்கிக்கொள்ளுதலும், இருட்டுப் பகுதிகளுக்குள் அமர்ந்து கொள்வதும், பரம்பரை இழிவின் துயரமும் இயல்பும் ஏற்படுத்திய பணம், அதிகாரம், அந்தஸ்து ஏதுமற்று, கௌரவம் போன்ற சமூக

மதிப்பீடுகளற்றுப் போனதால் குறைந்தபட்ச பயன்பாட்டுத் தன்மைகளையும் இழந்து போய், தான் தன் எதிரில் யாரைச் சந்திக்கிறார்களோ அவர்கள் எப்படிப்பட்ட குணவான்களோ? அவர்களுக்கு ஏற்ப தங்கள் வெளிப்பாடுகளைக் கொண்டவர்களாக விடுதலைக் குரல் எழுப்புபவர்களிடம் அழுகையையும் உள்ளுணர்வின் வேட்கைகளையும் ஆண்டைகளிடம் அஞ்சி நடுங்குவதைப் போலும், அடியாட்களிடம் அவர்களைக் காட்டிலும் விசுவாசிகள் என்பதாகவும், அரசு அதிகாரிகளிடத்தில் என்ன பேசினாலும் பிரச்சனை என்றால் கூட்டம் சேர்ந்து கொள்வதும் ஏதும் அறியாதவர்களைப் போலவே நடந்து கொள்வதும், அள்ளி இறைப்பவர்களிடத்தில் இரு கையேந்திப் பெற்றுக்கொள்கிறவர்களாக மாறி, மாறி, மாறி தன் முகம் எது? என்ற கேள்விக்கு பதிலேதும் இல்லாத முகமற்றவர்களாக மாறிப்போகும் அவலம் நிகழுகிறது.'' (மு. சந்திரக்குமார், எரியும் பட்டத்தரசி, ப. 416) என்று மு. சந்திரக்குமார், அதிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்தலில் தனது சுயமரியாதையை இழந்து சுதந்திரத்திற்கு அந்நியப்பட்டு நிற்கும் சமூகமாக அடையாளப்பட்டிருப்பதை எடுத்துரைக்கிறார்.

அதிகாரம் என்பது ஒருவரை எளிமையாக உடல்வதைக்கு, மனவதைக்கு உட்படுத்துவது. அது சமூகத்தில் ஓர் இயந்திரத்தனமானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பன்முகத் தன்மை கொண்டது. சமூக இயங்குமுறைக்கு ஒப்ப பரிணாமமடைகிறது.

ஆணாதிக்கம், சாதி, காவல்துறை, வன்முறை போன்றவை ஆதிக்கவாதிகளின் நலனுக்காக இயங்கும் அதிகார இயந்திரங்களாகும். இதன்வழி தனக்குக் கீழானவர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்கி, தனது அதிகாரவளத்தைத் தன்னிறைவுக்கு உள்ளாக்கிக்கொள்கின்றது.

சாதிய வன்முறைகள்

இந்திய ஒன்றியத்தில் சாதியத்தை அழித்தொழித்தல் சமூகப் பண்பாட்டை அழித்தொழித்தலாகப் பொருள் கொள்ளப்படுகிறது. சாதியத்தை விடுத்து சமூகத்தை நோக்கும்போது அது குறைநோக்காக அடையாளப்படுத்தப்படுகிறது. மதம், இனம், பாலினம் என்ற அதிகார இயந்திரங்களின் ஆணிவேராகச் சாதியம் இந்திய ஒன்றியத்தில் நிலைகொண்டுள்ளது. இதன் பரிணாம வளர்ச்சி சமநிலைச் சமூகத்தைக் கட்டமைப்பதில் சிக்கலை உருவாக்கி வருகிறது. இந்நிலையை இலக்கியங்களும் உள்வாங்கி இயக்கம் கொண்டுள்ளன. அவ்வகையில் கொங்குவட்டாரப் புதினங்களில் சாதியம் மையப்பொருண்மையாகப் பதிவாக்கம் பெற்றுள்ளது.

சாதிய இயந்திரத்தில் முக்கியமானது அடக்குமுறை. விளிம்புநிலைச் சாதிகளின் தன்னுணர்வு மனநிலை மேலெழாதவாறு அடக்கி ஆட்கொள்வது இதன் கடமையாகும். விளிம்புநிலைச் சாதி ஆதிக்கச் சாதியை எதிர்கொள்ளும்போது ஏற்படும் இழப்பு விளிம்புநிலைக்கானதாக உள்ளது. ஆதிக்கச் சாதி தனது அதிகார பலத்தை விளிம்புநிலையினரின் உடைமையை இழக்கச் செய்தல், உடலை வதைக்குள்ளாக்குதல் என்பதாக வெளிப்படுத்திக் கொள்கிறது.

ஓடைப்புல் புதினத்தில் சின்னையா கவுண்டர் அருந்ததியினர் பகுதிகளில் அவர்களது மாட்டு எருவை இலவசமாக எடுத்துக் கொண்டு செல்வதில் அங்கு எதிர்ப்புக்குரல் எழுகிறது. இதனால் கோபம் கொண்ட அவர், ''மாங்கரையில் கிழக்கு வளவில்தான் குபுகுபுவென மர உயரத்திற்குத் தீ எரிந்தது. நேரமாக ஆக கூச்சலும், அழுகையும் கூடியது. ஆடுமாடுகள் கத்துவது கூடச் சன்னமாகக் கேட்டது.'' (சி.ஆர். ரவீந்திரன், ஓடைப்புல், ப. 53) இவ்வாறு அருந்தியினர் பகுதியைத் தீக்கிரையாக்குகிறார். அதாவது விளிம்புநிலையினரிடம் உடைமை உருவாகும்போது கலகக் குரல் எழுகிறது. அதை அழித்தொழித்தலின்வழி கலகக் குரலை மழுங்கடித்து தனது அதிகாரத்தை ஆதிக்கச் சாதி நிலைநாட்டிக்கொள்கிறது. இதை, ''வாழ்விடத்தை இல்லாமலாக்குவது சாகடிப்பதைவிட மோசமான வன்முறை. இந்நிலைமை பாதிக்கப்பட்டவனின் இருப்பையே அழிக்கிறது. உயிரை

மட்டும் விட்டு வைப்பதன் மூலம் இழப்பு ஏற்படுத்திய வலியிலேயே அவனை உழலவைக்கும் உளவியல் தந்திரம் இது.'' (ஸ்டாலின் ராஜாங்கம், ஆணவக் கொலைகளின் காலம், ப. 38) என்று ஸ்டாலின் ராஜாங்கம் குறிப்பிடுவது சான்றளிக்கிறது.

விளிம்புநிலைச் சாதிகளிடம் உடைமை உருவாக முக்கியக் காரணிகளில் ஒன்று பொதுப்போக்குவரத்து உருவான சூழலாகும். அது உருவான பின்பு வேலை நிமித்தமாக பண்ணையடிமையிலிருந்து விடுவித்துக்கொண்டு நகரத்தில் உள்ள வேலைகளை நோக்கி நகர ஆரம்பித்தனர். இதனால் இவர்களின் கைகளில் உடைமை உருவாக ஆரம்பித்தது. இது ஆதிக்கச் சாதிகளிடையே ஏற்படுத்த வழிவகுத்தது.

பொதுப்போக்குவரத்தும் அதிகாரச் சிக்கலும்

உலகமயச் சூழலில் விளிம்புநிலைச் சாதி விவசாய நிலங்களை விட்டு தொழிற்சாலைகளை நோக்கி இடம்பெயரத் தொடங்கினர். அதேபோல் நகரங்களின் தொடர்பு அவர்களை மேலும் கிராமப்புற சாதிய அதிகாரத்திலிருந்து அந்நியப்பட வைத்தது. இச்சூழலில் பொதுப் போக்குவரத்து அவர்களின் வலசைக்குப் பெரும் பங்காற்றியது. இதைப் பயன்படுத்தி விளிம்புநிலையினர் உடைமைப் பெருக்கத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். ஆனால் இதை ஏற்றுக்கொள்ளாத ஆதிக்கச் சாதியினர் சாதிய அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முனைப்பு காட்டினர்.

''கல்வி, வேலைவாய்ப்பு, சமூக விழிப்புணர்வு போன்ற பல்வேறு காரணங்கள் சார்ந்து தலித்துகள் இடம்பெயர்ந்துள்ளனர். இது தங்களுக்கான உடலுழைப்பை வழங்கியவர்களை மட்டுமல்ல, தங்கள் பண்பாட்டு அதிகாரத்தைச் செலுத்துவதற்காக இருந்த 'கீழானவர்களை'யும் இழக்கவைத்து ஆதிக்க வகுப்பினரைப் பண்பாட்டு உளவியல் பிரச்சினையில் தள்ளியிருக்கிறது.'' (மேலது., ப. 13) என்ற ஸ்டாலின் ராஜாங்கத்தின் கூற்றுவழி அதிகாரக் கட்டிலிருந்து விலகும்போதும் ஆதிக்கச் சாதியைத் துறத்தல் என்ற எண்ணம் மேலெழும்போதெல்லாம் விளிம்புநிலைச் சாதி அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறது.

தனக்குச் சமமாக அமருதல், தன்னுடலை உரசிக்கொண்டு நிற்றல் போன்றவற்றைச் சகித்துக் கொள்ள முடியாத ஆதிக்கச் சாதி விளிம்புநிலையினர்மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகிறது. இந்தச் சூழலைச் செம்புலம் புதினம், பேருந்தில் அமருவதில் காலனிப் பகுதியைச் சேர்ந்த இளைஞனுக்கும் ஆதிக்கச் சாதியினருக்கும் இடையே நடந்த அடிதடி பிரச்சனையை முகாந்திரமாகக் கொண்டு, ''அன்று இரவு உறுமியபடி இருபது முப்பது பைக்குகள் சேரிக்குள் பாய்ந்து வந்தன. மேடும் பள்ளமுமான சந்துகளில் மூர்க்கமான வேகத்தில் பறந்து சென்றவர்கள், அங்கே இருந்த தொட்டிகள், கட்டில்கள், இருசக்கர வாகனங்கள் எல்லாவற்றையும் போகிற போக்கில் இரும்பு பைப்புகளைக் கொண்டு உடைத்து நொறுக்கினர். மக்கள் பீதியடைந்து வீடுகளுக்குள் ஒடுங்கிக் கிடந்தனர்.

என்ன நடக்கிறதென்று தெரியாமல் பஸ்ஸை விட்டு இறங்கிவந்த காலனிக்காரர்கள் இருவர் அடித்து நொறுக்கப்பட்டனர். ஒரு ஆட்டுக் கிடாயின் மீது நெருப்பு வைக்கப்பட்டது.'' (இரா. முருகவேள், செம்புலம், ப. 230) இவ்வாறு ஆதிக்கச் சாதிகள் சாதிய வன்முறையைச் செலுத்தியதைப் பதிவுசெய்கிறது. பேருந்தில் ஆதிக்கச்சாதிமீது தவறு இருந்தும் அங்கிருந்த காலனி பகுதி பெரியவர்கள் மன்னிப்பு கேட்ட நிலையில் இந்த அடக்குமுறை மேற்கொள்ளப்படுகிறது. இதன்வழி, ஆதிக்கச்சாதிமீது தவறு இருந்தாலும் அதில் மன்னிப்பு கோருவது விளிம்புநிலையினராகத்தான் இருக்கின்றனர் என்பது புரிபடுகிறது.

பொதுப்போக்குவரத்து உருவானபோது அதை எதிர்கொள்வதில் ஆதிக்கச் சாதி பெரும் சிக்கலை எதிர்கொண்டது. அவர்களுக்குச் சாதகமானதாக இருந்தாலும் விளிம்புநிலையினர் பயன்பாட்டிற்குச் செல்லும்போது அது சமூக ஒவ்வாமையாக அடையாளங்காண்கிறது. இந்த ஒவ்வாமையின் வெளிப்பாட்டை எரியும் பட்டத்தரசி புதினம், “கூட்ட நெரிசலும், ஆட்டோவின் அசைவிலும், அலைக்கழிக்கப்பட்டு கசங்கிக் கொண்டிருந்தது உடல்கள் மட்டும் அல்ல மனமும்தான். வாழ்வின் விதியாக மாறிக் கொண்டிருக்கிற விஷயங்களை யாரும் மறுத்துப் பேசவில்லை. என்ன? இன்னும் பத்து நிமிடங்கள்தானே! என்று பொறுத்துக் கொண்டார்கள்.

பொறுக்க முடியாமல் தகித்தவர் ரங்கநாதச் சக்கிலியனுக்கும் ராமசாமி சக்கிலியனுக்கும் இடையில் உட்கார்ந்து கொண்டிருந்த தங்கராஜ் ஆதிக்க சாதிப்பிரமுகர் தான், அக்கடான்னு! காத்தாட நடந்து போய்க்கிட்டிருந்த மனுஷனுக்கு சமூகவிதி கட்டாயமாகி கூட்டம் நிறைந்த ஆட்டோவில் போவதே எரிச்சல்தான். அதே சமயம் சக்கிலியனுக்குச் சமமாக உட்கார வேண்டியதாகிப்போச்சே! எதிரில் அமர்ந்திருக்கும் நபர்கள் பற்றிப் பிரச்சனையில்லை, அவர்களுடைய முகத்தில் சாதி கண்டுபிடிக்கத் தெரியாது. இரண்டு பேர் வட நாட்டுக்காரனுக அவனுகளுக்கு மொழி தெரியாது. ஆனால், அங்கேயும் சாதி இருக்கிறது, கொடுமைகள் இருக்கிறது அதிலிருந்து தப்பித்தான் முகக்குறி அறியாத மக்களுக்கு மத்தியில் அவர்கள் நிம்மதியாகப் பயணம் செய்கிறார்கள் என்பது தங்கராஜ் உணர்ந்தானோ இல்லையோ தெரியாது.

ஊரைவிட்டு வெளியில் போனதுக்கப்புறம் சாதி மறக்கத் துவங்கிவிட்ட ரங்கநாதனும் ராமசாமியும் எட்டிப்பார்த்துப் பேசிக் கொண்டுவர, காலம்காலமாக ஊருக்குள் நிலவும் சாதிப் புழக்கத்தை அதன் நாற்றத்தைச் சகித்துக் கொண்டு வளர்ந்தவர்களான, கடின உடல் உழைப்பாளிகளுக்கு, ஆட்டோ கூட்டம் புளுக்கமாகத் தெரியவில்லை. காற்றுப்புகும் இடைவெளிகளுக்குள் புகுந்து சரசமாடும் நட்பு உள்ளவர்கள் சூழலை மறந்து பேசிக் கொண்டு வந்தனர். ஆதியில் எவனுக்கோ வேர்த்த வியர்வையில் நனைந்து பிறந்ததினாலோ அவ்வாறு சொல்லி வளர்க்கப்பட்டதாலோ வெந்து புளுங்கினார் தங்கராசு, உள்ளூர் ஆதிக்கச் சாதி மகன், தானொருவன் இங்கே இருப்பதை இவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என்பதற்காக, “டேய் மேலே கால் படுது தள்ளி உட்காருடா” என்றார். அந்த டேய்தான் அவர்களை சம உலகத்திற்குக் கொண்டு வந்தது.” (மு. சந்திரக்குமார், எரியும் பட்டத்தரசி, ப. 478) என்றவாறு பதிவுசெய்கிறது. ஆதிக்கச் சாதி பொதுப்போக்குவரத்தில் எதிர்கொண்ட சிக்கல்தான் காளப்பட்டி கலவரத்திற்கு அடித்தளமாகிறது.

இதேபோல், பேருந்தில் ஆதிக்கச் சாதியினர் ஏறிய பிறகு, அவர்களுக்கு இடம் கொடுக்காது இருக்கையில் அமர்ந்து வந்ததிற்காக விளிம்புநிலைச் சாதியைச் சார்ந்த செகுடந்தாழி முருகேசனை கொலைக்குட்படுத்துகின்றனர். இதைப் புத்துமண் புதினம், “மேல்சாதிக்காரன் நிற்கிறபோது முருகேசன் இருக்கையில் அமர்ந்திருக்கிறான், சாதிக்கு மரியாதை கொடுத்து எழவில்லை, எழுந்து உட்கார இடம் தரவில்லை. அவன் இறங்கிய பின்புதான் அவனைத் தள்ளிப் போய் அடித்தது. கீழே விழுந்தவன் தலைமேல் கல்லைத் தூக்கிப் போட்டது.” (சுப்ரபாரதிமணியன், புத்துமண், ப. 40) என்று பதிவுசெய்கிறது. இது தமிழ்நாட்டு வரலாற்றில் நிகழ்ந்த உண்மைச் சம்பவமாகும். ஆதிக்கச் சாதியின் அதிகாரத்தை விளிம்புநிலைச் சாதி தவிர்க்கும் பொழுது அதற்கு எதிர்வினையாக அம்மக்களின் வாழ்வாதாரம் சூறையாடப்படுகிறது.

அடக்குமுறைகளை நிகழ்த்தும் ஆதிக்க மனம்

அதிகாரம் இருவகையில் செயலாற்றுகிறது. 1. பிறப்பின்வழியிலான அதிகாரம் 2. தற்காலிகமான அதிகாரம். முதலாவது பிறர்மீது அதிகாரத்தைச் செலுத்துவதற்கான ஏகபோக உரிமை கொண்டது. இரண்டாவது பிறர்மீது அதிகாரம் செலுத்த வழங்கப்பட்ட தற்காலிக உரிமை. இதை, “படிநிலையில்

ஒவ்வொருவரும் கொஞ்சம் சுகங்களை, கொஞ்சம் அடிமைகளை வைத்துக்கொள்ள அனுமதித்து விட்டால், அவரவர் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள அவர்கள் மோதிக் கொள்வார்கள். பாதிப்போர் தட்டைக் கையில் வைத்து மணியடித்துக் கொண்டு, யாருக்கும் புரியாத பாஷையில் முனகிக் கொண்டு காலத்தைக் கழிக்க, மீதிப்பேர் ஐட்ஜாகி நீதி சொல்லிக் கொண்டிருக்கலாம் என்று போட்ட கணக்கு இன்றைக்கு வரையிலும் சரியாகவேதான் நடந்து கொண்டிருக்கிறது." (மு. சந்திரக்குமார், மு.நூ., ப. 463) என்று மு. சந்திரக்குமார் குறிப்பிடுகிறார். ஆதிக்கச் சாதிக்கு மேலே ஒரு சாதி இருந்தாலும் தனக்கு கீழாகச் சாதிகள் இருப்பதைக் கொண்டு தன்னிறைவு பெற்றுக்கொள்கிறது.

ஆதிக்கச் சாதி பிறப்பின்வழியிலான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அந்த அதிகாரத்தைப் பிறப்புரிமையாக நோக்குகிறது. அதிகாரத்திற்கு அடிபணிந்திருத்தல் விளிம்புநிலைச் சாதியின் கடமையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தை நுகர்தல் மனித சமூகத்திற்குப் பொதுவான ஓர் அம்சமாக இருந்தாலும் விளிம்புநிலைச் சாதி அதற்கு எத்தனிக்கும்போது சிக்கல் உருப்பெறுகிறது.

அதிகாரம் நேரடியாகவும் மறைமுகமாகவும் இயக்கம் கொள்கிறது. நேரடியான அதிகாரம் வன்முறையைக் கையாள்வதாகவும், மறைமுகமான அதிகாரம் தன்னைத் தானே அதிகாரத்திற்கு ஒப்ப வடிவமைத்துக் கொள்வதாகவும் நிலைபெற்றுள்ளது.

"அதிகாரம் எல்லா இடத்திலும் நீக்கமறப் பரவிக் கிடக்கிறது என்பது அனுபவமாகி உண்மையெனப்படுகிறது. இந்த அதிகாரம் ரூபமாகவும், அரூபமாகவும் இயங்குகிறது; ரூபமாக இயங்குவதில் வெளிப்படும் சக்தியைவிட, அரூபமாக இயங்குவதில்தான் இதனுடைய மாபெரும் சக்தி திரட்சியுற்றுக் கிடக்கிறது; இத்தகைய அதிகாரங்களை மனித மனத்தில் கட்டமைப்பதில் மொழியின் சொல்லாடல் (Discourse) பெரிதும் வினைபுரிகிறது" (ப்ரான்சஸ் ப்யிலின், கருப்பினப் பெண்ணியப் பிரகடனம், ப. 64) என்ற ப்ரான்சஸ் ப்யிலின் கருத்து கவனிக்கத்தக்கது. நேரடியான அதிகாரத்தை விட மறைமுகமானது சாதியச் சமூகத்திற்கு ஒப்புமையுடையது. இந்த மறைமுகமான அதிகாரம் மொழியின் வழியே சாத்தியப்படுகிறது. அதுவே சாதியத்தைக் காத்து வருகிறது.

உரத்த குரல் அதிகாரத்திற்கு ஒவ்வாதது. அதுபோல மரியாதையற்ற வார்த்தைகள் அதிகாரத்தை எதிர்ப்பதற்குச் சமமானதாகக் கருதப்படுகிறது. ஆதிக்கச் சாதி, விளிம்புநிலைச் சாதியை உரத்த குரலில் பேசுதலும், மரியாதையற்ற வார்த்தைகளால் விளித்தலும் இயல்பான சமூக நடத்தையாகக் கருதப்படுகிறது. இது நேரடியான அதிகார வடிவத்திற்குள் இயக்கம் கொள்கிறது. ஆதிக்கச் சாதியின் அடக்குமுறைக்கு மௌனித்திருத்தல் மறைமுக அதிகாரத்திற்கானது. இதுதான் சாதியச் சமூகத்திற்கு ஏற்புடையதாக உள்ளது.

சாதியச் சமூகத்தில் ஒரு சாதி இன்னொரு சாதிக்கு இணையானது அல்ல. அனைத்துமே தனக்கு கீழான ஓர் அமைப்பை எதிர்பார்க்கிறது. அதுபோல ஆரியப் பண்பாட்டுக் காலனியம் உருவாக்கி வைத்துள்ள இச்சாதியப் பண்பாட்டில், "ஒருபின்ன அளவு பார்ப்பனியம் அனைவருள்ளும் இருக்கிறது. அவர்கள் எந்தச் சாதியாக இருந்தாலும்." (அம்பேத்கர், சாதியை அழித்தொழித்தல், ப.49) என்ற அருந்ததிராயின் கருத்தியல் புரிதலுக்குட்படுத்துகிறது. சாதி மனிதர்களைப் பிளவுபடுத்தி அதிகாரத்தை நுகர்வதற்கான போட்டாபோட்டியை உருவாக்குகிறது. இதில் நடுநிலையாகப் பார்ப்பனியம் இயக்கம் கொள்கிறது.

கொங்கு வட்டாரப் புதினங்களில் இடைநிலைச் சாதிகள் பார்ப்பனியத்தை உட்செறித்துக் கொண்டு விளிம்புநிலைச் சாதியைச் சிதறடித்து வைத்துள்ளது பதிவாக்கம் பெற்றுள்ளது. இதில் சுய சாதிக்குள்ளேயே விருப்பு, வெறுப்பு உருவாக்கப்படுகிறது. இது விசுவாச மனநிலையாகப் பரிணமிக்கிறது. ஆதிக்கச் சாதிக்குச் சேவை செய்தல் கடமையாகப் போதிக்கப்பட்ட ஒருவர் தன்

முதலாளிக்கு விசுவாசமாக நடந்துகொள்ளும்போது, அவர் தனது சுய சாதியினருக்கு விரோதமாக நடப்பதைத் தனக்குக் கிடைத்திருக்கும் தற்காலிக அதிகாரம் எனச் சாதியக் கட்டமைப்பு நினைக்கத் தூண்டுகிறது.

ஓடைப்புல் புதினத்தில், சின்னையா கவுண்டரிடம் வேலை செய்யும் விளிம்புநிலைச் சாதியினர் தங்கள் சாதிக்கு ஆதரவாகப் போராடிய ராக்கியண்ணனை அக்கவுண்டரின் தூண்டுதலின் பேரில் கொலை செய்கின்றனர். அந்தக் கொலையை வெளியே சொல்லாமல் பாதுகாக்கின்றனர். இதை விசுவாசமாகக் கருதினாலும் ஏவல் தொழிலைச் செய்ய வழங்கப்பட்ட அதிகாரமாக எண்ணிக்கொள்கிறது. இதனால் விளிம்புநிலைச் சாதிக்குதான் இழப்பு என்பதை அவர்கள் உணர்வதில்லை. ஆதிக்கச் சாதி காலம் காலமாக இம்மாதிரியான போலி அதிகாரத்தை வழங்கி விளிம்புநிலைச் சாதிக்குள் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாள்கிறது. இதில் விசுவாச மனநிலை கட்டுடையும்போது அவர்கள் களையெடுக்கப்படுகின்றனர்.

இதன்வழி, விளிம்புநிலைச் சாதி ஏவலுக்கு அடிபணிந்து நடத்தலை ஆதிக்கச் சாதி கண்காணிப்பிற்கு உட்படுத்தி வருகிறது. அதிலிருந்து விலகுதல் ஆதிக்கக் கட்டிலிருந்து அப்புறப்படுவதாக நினைத்து அவர்களது வாழ்வாதாரம் சிதைவிற்கு உள்ளாக்கப்படுகிறது.

முடிவுரை

விளிம்புநிலையினரிடம் உடைமை உருவாகும்போது அவர்களிடம் கலகக் குரல் எழுகிறது. அதை அழித்தொழித்து, தனது அதிகாரத்தை ஆதிக்கச் சாதி நிலைநாட்டிக்கொள்கிறது. அதிகாரக் கட்டிலிருந்து விலகும்போதும் ஆதிக்கச் சாதியைத் துறத்தல் என்ற எண்ணம் மேலெழும்போதும் விளிம்புநிலைச் சாதி அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறது. விளிம்புநிலைச் சாதி ஏவலுக்கு அடிபணிந்து நடத்தலை ஆதிக்கச் சாதி கண்காணிப்பக்கு உட்படுத்தி வருகிறது. அதிலிருந்து சற்று மறையும்போது அவர்களின் வாழ்வாதாரம் ஆதிக்கச் சாதியால் சிதைவிற்கு உள்ளாக்கப்படுகிறது.

துணைநூற் பட்டியல்

1. அம்பேத்கர், பி.ஆர்., 2016, சாதியை அழித்தொழித்தல், முதல்பதிப்பு. நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பகம்.
2. சந்திரக்குமார், மு., 2015, எரியும் பட்டத்தரசி, முதற்பதிப்பு. கோவை, பதிவுகள் பதிப்பகம்.
3. சுப்ரபாரதிமணியன், 2019, புத்துமண், முதற்பதிப்பு. சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
4. ப்ரான்சஸ் ப்யிலின், 2017, கருப்பினப் பெண்ணியப் பிரகடனம், (யாழினி,அரசி, கிருத்திகன் மொ.பெ.), முதல் பதிப்பு. புதுச்சேரி. அணங்கு பெண்ணியப் பதிப்பகம்.
5. முருகவேள், இரா., 2022, செம்புலம், இரண்டாம் பதிப்பகம். கோயம்புத்தூர். ஐம்பொழில் பதிப்பகம்.
6. ரவீந்திரன், சி.ஆர்., 2017, ஓடைப்புல், ஐந்தாம் பதிப்பு. சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
7. ஸ்டாலின் ராஜாங்கம், 2016, ஆணவக் கொலைகளின் காலம், முதற்பதிப்பு. நாகர்கோவில். காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

References

1. *Ambedkar, P.R., 2016, Annihilation of Caste, 1st ed. Nagercoil. Kalachuvadu Publishing House.*

2. *Chandrakumar, M., 2015, Eriyum Pattatharasi, First Edition. Coimbatore. Records Publishing*

3. *Subrabharathimanian, 2019, Puthuman, first edition. Chennai. New Century Book House (B) Litt.*

4. *Frances Pillin, 2017, The Black Feminist Manifesto, (Yashini, Arasi, Kritikan Mo.P.), 1st ed. Puducherry. Anangu Feminist Publishing House.*

5. *Murugavel, Ir., 2022, Sembulam, Second Edition. Coimbatore. Aimpozil Publishing House.*

6. *Ravindran, C.R., 2017, Odaipul, Fifth Edition. Chennai. New Century Book House (B) Litt.*

7. *Stalin's Reign, 2016, Aanava Kolaikalin Kalam, 1st ed. Nagercoil. Kalachavadu Publications (B) Ltd.*

Cite this Article in English

Aruna.R " **Mechanisms of Power and Repression in Kongu Regional Innovations**" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.2 Issue 1, January 2025, pp. 1-8*

21-ஆம் நூற்றாண்டுத் தமிழும் அதிகார அரசியலும்

21st Century Tamil and Power Politics

2

சின்னச்சாமி.ப, மொழித்துறை, ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), சூலூர், கோயம்புத்தூர் – 641 402.

Chinnasamy.P, Department of Languages, R.V.S. College of Arts and Science (Autonomous), Sulur, Coimbatore – 641 402.

ORCID: https://orcid.org/0000-0001-9617-1426

DOI: 10.5281/zenodo.14719851

Abstract

Language has undergone many changes over time. At the same time, it can be seen that language has adapted to the geographical environment. Language was formed by human labor, and after the discovery of agriculture, it became settled and moved around for trade and industry, and language mixing became inevitable.

During the Sangam period, the Sangam hymns have recorded the situation where trade goods from many countries like Egypt, Greece, Rome, and China entered the Tamil territory. Similarly, Tamil scholars have pointed out that language mixing has also occurred. The mixing of these languages with the Tamil language is not complicated. However, what is debatable is the authority that a language is sacred. Sanskrit identified itself as the language of the gods and declared Tamil as a vulgar language. From here, the discourse of language purity becomes politics.

With this, it is inevitable that the ideology that written literature is superior and folk literature is inferior has been established. That is, those who learned to write and wrote and sang were intelligent. The trend of dismissing songs sung by illiterate people as lay songs began to take hold. Tolkappiyam emphasizes speech and promotes writing as a consequence. But it is painful that most Tamil scholars continue to approach Tolkappiyam from the source.

ஆய்வுச் சுருக்கம்

மொழி காலச்சூழலுக்கேற்க பல மாற்றங்களுக்குட்பட்டு வந்துள்ளது. அதேசமயம் மொழி, நிலச்சூழலுக்கேற்ப தகவமைந்திருப்பதைக் காணமுடிகிறது. மனித உழைப்பினால் மொழி உருவாகி, விவசாயம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, நிலைகுடியாக மாறி, வணிகம், தொழில் சார்ந்து நகரும்போது மொழிக்கலப்பு நிகழ்வது தவிர்க்க இயலாததாகிறது.

சங்க காலத்தில் எகிப்து, கிரேக்கம், ரோம், சீனம் போன்ற பல நாட்டு வணிகப் பொருட்கள் தமிழ் நிலப்பரப்பிற்குள் புழங்கிய நிலையைச் சங்கப் பாடல்கள் பதிவுசெய்துள்ளன. அதுபோல, மொழிக்கலப்பும் நிகழ்ந்துள்ளதைத் தமிழ் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இம்மொழிகள் தமிழ் மொழியுடன் கலந்தது சிக்கலானதல்ல. ஆனால், ஒரு மொழி புனிதமானது என்று

அதிகாரம் செய்து கொண்டு வந்ததுதான் விவாதத்திற்குரியது. சமஸ்கிருதம் தன்னை தெய்வ மொழியாக அடையாளப்படுத்திக்கொண்டு, தமிழை நீச மொழியாக அறிவித்தது. இங்கிருந்துதான் மொழித்தூய்மை என்ற உரையாடல் அரசியலாகிறது.

இத்துடன் எழுதப்படும் எழுத்திலக்கியம் உயர்ந்தது, நாட்டார் இலக்கியம் தாழ்ந்தது என்ற கருத்தியல் நிலைபெற்றதைத் தவிர்க்கமுடியாது. அதாவது, எழுத்ததைக் கற்று எழுதியவர்கள், பாடியவர்கள் அறிவாளிகள். எழுத்தறிவில்லாதவர்கள் பாடிய பாடல்கள் பாமரப் பாடல்கள் என்று அதை ஒதுக்கும் போக்கு நிலைபெறத்தொடங்கியது. தொல்காப்பியம் என்பது பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுத்தை அதன்விளைவாக முன்னிறுத்துகிறது. ஆனால் பெரும்பாலான தமிழ் அறிஞர்கள் நன்னூலிலிருந்து தொல்காப்பியத்தை அணுகும் முறையைக் கைக்கொண்டிருப்பது வேதனை அளிக்கிறது.

Keywords; தமிழ், வட்டாரம், சைவம், வைணவம், கல்வி, இலக்கணம்

முன்னுரை

இலக்கணங்கள் மக்களின் வாழ்வியலில் மொழியின் தாக்கம், பாடுபொருள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியானவை. தமிழ் இலக்கணங்கள் மரபுக்கவிதைக்கு இலக்கணம் வகுப்பதையே முதன்மையாகக் கொண்டிருக்கிறது. ஆங்கிலேயர் வருகைக்குப்பிறகு தமிழில் தோன்றிய புதுக்கவிதை, உரைநடை வடிவங்களுக்கான இலக்கணங்கள் இன்னும் கட்டமைக்கப்படவில்லை.

தமிழ் மொழி வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபட்டு ஒலிக்கிறது. எழுத்து வழக்கு ஒன்றுபோல இருந்தாலும் பேச்சு வழக்கு அவ்வாறாக இல்லை. எழுத்து வழக்கிற்கு இலக்கணம் உள்ளது. பேச்சு வழக்கு இலக்கண வரையறைக்குக் கட்டுப்படாதது. எனவே அதைப் புறந்தள்ளிவிடுவதா? என்றால் கூடாது என்றே பதிலுரைக்கிறது நா. முத்துநிலவனின் தமிழ் இனிது நூல்.

அறிஞர்களும் பாமர மக்களும்

பேச்சு வழக்கு பாமர மக்களுக்கானது என்று கல்வி கற்றவர்களிடையே ஒரு பொதுபுத்தி கட்டமைந்துள்ளது. எழுத்துக் கட்டமைக்கும் சொற்களே தமிழ் என்று நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால் நா. முத்துநிலவன் பேச்சு வழக்கில் ஒரு சொல் நிலைத்துவிட்டது என்றால் - அது தவறாக இருந்தாலும் – அதைச் சுட்டிக்காட்டி ஏற்கச் சொல்கிறார். அதாவது பேச்சு வழக்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். “அறிஞர்கள் உருவாக்கும் சொற்களைவிட மக்களின் மொழி பொருத்தமாய் அமைந்து நிலைத்து விடுவதுண்டு.” (ப. 131) என்கிறார். செம, சகோ போன்றதை ஏற்றுக்கொள்கிறார். இருந்தாலும் எழுத்து மரபை அறிந்திருப்பது அவசியம் என்றுரைக்கிறார். ஜி போலும் பிறமொழி ஒட்டுச் சொற்களைத் தவிர்க்கலாம் என்கிறார். ஆனால் வடமாநிலத்தவர் அண்ணா என்று அழைத்தாலும் நம்மவர் ஜி என்று அழைத்து கொள்வது நகைப்பிற்குரியது.

‘அக நக முக நக’ பாடல் உச்சரிப்பு சரியா? என்ற பகுதியில் ஆசிரியர் மாற்றிலக்கண அடிப்படையில் உச்சரிப்பைப் பயன்படுத்துதல் குறித்து எடுத்துரைக்கிறார். பாடல் வரிகள் சரியாக இருந்தாலும் உச்சரிப்புகள் சரியாக அமைந்தால்தான் சரியான அர்த்தத்தில் போய்ச் சேரும். இது மாதிரியான ஒரு பிரச்சனை செம்மொழி மாநாட்டிற்காக அமைக்கப்பட்ட ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற பாடலில் ‘கேளிர்’ என்பது ‘கேளீர்’ என நீண்டு ஒலிக்கப்பட்டதாகவும் அதனால் அதன் பொருள் மாறிவிடுகிறது என்றும் விவாதிக்கப்பட்டது. இவ்வாறு தமிழ்மொழி உச்சரிப்பில் கவனம் தேவை என்பதை சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வாறு சொற்களை மட்டுமல்லாது கருத்தியலையும் மடைமாற்றுபவர்களாக படித்த அறிஞர் சமூகம் செயல்பட்டிருக்கிறது. இதை நா. முத்துநிலவன், “படித்தவர்கள் கலப்பதும், படிக்காதவர்கள் தவிர்ப்பதுமான நுட்பத்தில்தான் தமிழ் மரபு இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது” (ப. 125) என்று குறிப்பிடுவது கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

தமிழும் சமயமும்

தமிழ்மொழி அனைத்து மொழிகளையும், கருத்தியல்களையும் உள்வாங்கி அதைத் தனக்கு ஒப்ப பேச அனுமதிக்கிறது. இதைப் புரிந்து கொண்டவர்கள், மொழியை விடுத்து சமயக் கருத்தியல்களை உட்புகுத்தி தமிழின் அறிவுச் சிந்தனையை மழுங்கடித்ததில் பெரும்பங்காற்றியுள்ளனர்.

சைவமும் தமிழும், வைணவமும் தமிழும் என்று தமிழைப் பின்னுக்குத் தள்ளி சமயத்தை முன்னிறுத்திக்கொண்டு தனித்தமிழ் என்று அடையாளப்படுத்திக்கொண்டனர். சமயத்தால் தமிழ் வளர்ந்ததா? தமிழைப் பயன்படுத்தி சமயத்தை வளர்த்துக்கொண்டார்களா?. சைவமும் தமிழும் என்பதில் என்ன தவறு இருந்து விடப்போகிறது என்று எண்ணலாம். சமயமும் மொழியும் என்று நோக்கினால் அதன் நுட்ப அரசியலைப் புரிந்துகொள்ள முடியும்.

“இந்தியப் பண்பாட்டு வரலாறு” நூலில் ஏ.எல். பாஷம் குறிப்பிடுவதுபோல, ‘சங்க இலக்கியம் சமயச் சார்பற்றவை’ என்ற கருத்தை நா. முத்துநிலவன் இந்நூலில் குறிப்பிடுகிறார். அனைத்துச் சமயங்களுக்கும் தமிழ் இடம்கொடுத்துள்ளது. ஆனால் தமிழ் மொழி பெயரில் சமயங்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டன. இன்று பொதுச்சமூகத்தில் தமிழ் மொழி உணர்வை விட சமய உணர்வு மேலோங்கியிருப்பது இதன் அடிப்படையில்தான் என்று கணிக்கமுடிகிறது.

தமிழ் – ஆணாதிக்க மொழியா?

ஆசிரியர், பேராசிரியர் என்பது பலர்பால் சொல்லாக இருந்தாலும் ஆண்களைக் குறிப்பதாகவே கருதிக்கொள்ளும் வழக்கம் நிலைபெற்று வருகிறது. அதற்கு மாறாக, பெண்கள் தங்களுக்கான கலைச்சொற்களை உருவாக்க வேண்டிய அவசியத்தில் உள்ளனர். விவசாயி என்பது பலர்பால் சொல்லாக இருந்தாலும் கலப்பையுடன் நிற்கும் ஆணைத்தான் கல்விச்சூழல் கற்பிக்கிறது. அதேபோல, இந்தியன் என்பதை ஆண்பாலாக எடுத்துக்கொள்வதா? பலர்பாலுக்கானதாக எடுத்துக்கொள்வதா? பெண்ணை எப்படி விளிப்பது என்ற நெருடல் மொழிக்கட்டமைப்பில் நிலைத்து வருகிறது.

“திருமணம் ஆன பெண்ணை ‘திருமதி’ என்கிறோம். திருமணம் ஆனாலும் ஆகாவிட்டாலும் ஆணுக்குத் ‘திரு’ அடைமொழியே நீடிக்கிறது. எப்போதும் ‘திருதிரு’ என்று இருப்பது (முழிப்பது) ஆண்கள்தானா என்ன? இப்போது இதை மாற்றி, திருமணம் ஆன, ஆகாத ஆண்-பெண் என யாவருக்கும் ‘திருமிகு’ என்னும் ஒற்றைச் சொல்லையே பயன்படுத்தும் புதிய சிந்தனை பரவி வருவது பாராட்டுக்குரியது” (ப. 110) என்று தமிழில் கட்டமைக்கப்பட்டுள்ள ஆணாதிக்க மொழியாடல்களுக்கு மாற்றாக பாலினச் சமத்துவத்தை முன்வைக்கும் சொல்லாடல்களை ஏற்றுக்கொள்ளச் சொல்கிறார். இதற்கு தமிழ் வழிவகுக்கிறது என்பது அவரின் கூற்று.

பெயர் வைத்தலில் பாலினமும் சாதியும்

குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும் முறை குறித்து ‘பெயரில் மாற்றம் தேவை?’ என்ற பகுதி பேசுகிறது. பிறமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தும்போது, அதைத் தமிழ் மரபுக்கு ஏற்ப மாற்றம் செய்ததைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. ஆனால், ப்ரியா போன்ற மெய்யெழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு பெயர்கள் சூட்டப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டி கேள்விக்குட்படுத்துகிறார்.

தற்காலத்தில் இன்னும் கூடுதலாக பெற்றோரின் பெயர்களின் முதல் எழுத்தைக் கொண்டு பெயர் வைப்பதும் அதற்கு அவர்களே புதிய அர்த்தத்தை வரையறுத்துத் தருவதும் நிலவி வருவதைக் கவனத்தில் கொள்ள வேண்டி உள்ளது.

ஒருவரின் பெயரைக் கேட்டாலே அவர் என்ன மதம் என்பதை அறிந்துவிட முடிகிறது. ஆனால் சாதி அடையாளங்காண்பது அரிதாக உள்ளது. அதனால் சாதிப் பெயரை பின்னொட்டாகப் பயன்படுத்தும் வழக்கம் பெரியாரின் புரட்சிக்குப் பின் இல்லையென்றாலும் சில சாதிகள் பயன்படுத்துவது தற்போது நிலவி வருகிறது. சாதி பெயரை பின்னொட்டாகப் பயன்படுத்தாவிட்டாலும் சாதிய அடையாளம் தாங்கிய பெயர்களை வைத்துக்கொள்வதைக் காணமுடிகிறது.

தமிழ் மொழி என்பது மதம், சாதி, பாலினம் சாராத மொழி. முன்பு சொன்னதுபோல அது அனைத்தையும் ஏற்றுக்கொள்கிறது என்ற காரணத்தினாலேயே அதனுள் இந்த கருத்தியல்கள் நுழைந்து அதைச் சீர்குலைத்துவருகிறது. பெயர் என்பது பண்பாட்டின் அடையாளம் என்பதை உணர்த்தி, “குழந்தைப் பெயர்கள், தமிழ்ப் பெயரெனில் நல்லதுதான். அதைவிட சாதி, மதம் காட்டாத பெயராக இருத்தல் நல்லது” (ப. 126) என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

தேவையான இடங்களில் மொழியின் கட்டமைப்பையும் அது வெளிப்படுத்தும் அரசியலையும் எடுத்துக்காட்டுவதில் தவறவில்லை.

“செட்டிநாட்டுப் பெரியோர் உள்ளிட்ட தமிழர் சிலரிடம் தந்தைவழிப் பெயர்கள்தான் இருக்கும். இதில் தாய்வழிச் சமூகத்தை மாற்றி, தந்தைவழிச் சமூகமாக நிலைநிறுத்திய ஆணரசியலும் இதில் உள்ளது.” (ப. 12) என்கிறார். தந்தையின் பெயரிலுள்ள முதலெழுத்தைக் குழந்தைக்கு முன் அடையாள எழுத்தாகப் பதிவுசெய்யும் பழக்கம் நிலைத்துவிட்டது. தாயின் முதலெழுத்தைப் பயன்படுத்துவது என்பது ஒரு வகுப்பில் இரு மாணவர்களின் பெயர்களும், அடையாள எழுத்தும் ஒரே மாதிரியாக இருக்கும்பொழுது தாயின் முலெழுத்து அடையாளப்படுத்தப்படுகிறது. இதிலும் ஊர் பெயரின் முதலெழுத்து அடையாளப்படுத்துவது அதிகமாக இருக்கிறது. தற்போது தனது பெயருக்குப் பின்னால் தந்தையின் பெயரை இணைத்துக்கொள்ளும் வழக்கமும் அதிகரித்துக் உள்ளது. தாய்க்கும் குழந்தைக்கும் பண்பாட்டு அடையாளத்தைத் தர இச்சமூகம் மறுக்கிறது என்பது இதன்வழி அறிய முடிகிறது.

தற்காலத்தில் தாய், தந்தையின் முதலெழுத்தை அடையாள எழுத்தாகப் பயன்படுத்துவது காணப்பட்டாலும், பிறப்புச் சான்றிதழ் வழங்கும் இடங்களில் இரண்டு அடையாள எழுத்துக்களைப் பயன்படுத்தக் கூடாது என்று கூறுவதைக் கவனிக்கவேண்டியுள்ளது. அவ்வாறு இருவரின் முன்னெழுத்தையும் பயன்படுத்துவதில் யாரினுடையதை முதலில் பயன்படுத்துவது என்ற பிரச்சனையை ஆணாதிக்க மனநிலை எழுப்புகிறது. தாயினுடையதைப் பயன்படுத்தினால் அந்த வீட்டில் பெண்தான் அதிகார இடத்தில் இருக்கிறார் என்று ஆணாதிக்க மனநிலை விளக்கம் கொடுக்கிறது என்பது நகைப்பிற்குரியாதாக உள்ளது.

இன்றைய சூழலில் தமிழில் இம்மாதிரியான சாதி, பாலினம் சாராத பெயர்களைச் சூட்டுவது காணப்பட்டாலும், தனது குழந்தையின் பெயரில் முன்னெழுத்தைத் தீர்மானிப்பவராக சோதிடர்கள் உள்ளனர். இதை உணர்ந்து தமிழ்ச் சமூகம் தங்களது குழந்தைகளுக்குத் எவ்வித அதிகாரக் கருத்தியல்களற்ற தமிழ்ப் பெயர்களைச் சூட்டவேண்டியது அவசியம்.

கல்வியும் இலக்கணமும்

தமிழை முதன்மை, முக்கிய பாடமாகப் படிப்பவர்களுக்கு இலக்கணம் படிக்கவேண்டியது

அவசியம். ஆனால் அவர்களும் கூட இலக்கணத்தைத் தேர்ச்சிக்காகப் படித்துவிட்டு விலகிவிடுகின்றனர். இவர்கள் இப்படியிருக்க தமிழை மொழிப்பாடமாகப் படிக்கும் மாணவனின் நிலை?. அவனுக்கு இலக்கணத்தைக் கற்றுத் தருவது சவாலானது. எளிமையான முறையில் கற்றுத்தர வேண்டியது அவசியம் என்பதை,

“சென்னைத் தமிழ் வேறொரு கிளை மொழியாக உருவெடுப்பது உறுதி. கொங்குத் தமிழ், நெல்லைத் தமிழ் சற்றே தாமதமாகலாம். எனவே, இலக்கணமாக அச்சுறுத்தாமல், பள்ளிக் குழந்தைகளுக்கு வாழ்க்கைமுறை மொழிநடையைக் கற்பிக்கும் தேவை உள்ளது” (ப. 125)

இவ்வாறாக எச்சரிக்கை செய்து, மாணவர்களுக்கு இலக்கணத்தைக் கொண்டு சேர்ப்பதற்கு வழிகாட்டுகிறார்.

இறுதியாக, “கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அறிவியல் கண்டுபிடிப்பு எதையும் தமிழர், தமிழில் சொந்தமாகத் தரவில்லையே, ஏன் என்பது தனி ஆய்வு” (ப. 142) என்று குறிப்பிடும் இடத்தில் பெரியாரின் ‘அறிவும் படிப்பும்’ என்ற கட்டுரையை நினைவு கூர்வது அவசியம். இக்கட்டுரை, ஈரோடு மகாஜன ஸ்கூலில், 17.09.1931இல் ஆற்றிய சொற்பொழிவு - ‘குடிஅரசு’ இதழில் 27.09.1931இல் வெளியானது. கிட்டத்தட்ட இந்தக் கட்டுரை நூற்றாண்டை எட்டப்போகிறது. அதில் அவர், “மதத்திற்கும் உலக இயற்கைக்கும் எப்போதும் சம்பந்தம் இருப்பதில்லை. ஏனெனில், அனேகமாய் எல்லா மதங்களுமே உலக இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை வழிமறித்துத் திருப்புவதையே ஜீவநாடியாய்க் கொண்டிருக்கின்றன. அதனால் மதம் கலந்தபடியால் இயற்கை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடமில்லாமலே போய்விடுகின்றது.”, “கல்வியில் மதமும் கலந்தால் அறிவு சூன்யமாக வேண்டியதே தவிர வேறில்லை.”, “அறிவு வேறு, மதம் வேறு என்று பிரித்துவிட வேண்டும்” (2016, ப. 561) என்று பெரியார் குறிப்பிடுவதிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டி உள்ளது.

இன்னும் இந்நூலில் பேசுவதற்கு எண்ணற்ற தகவல்கள் உள்ளன. நாம் பயன்படுத்துகிற சொற்கள் சரிதானா? மொழிபெயர்ப்பு சொற்களின் அவசியம் உணர்ந்து பயன்படுத்துதல் என்பதைச் சிறப்பாக இந்நூல் முன்வைத்துள்ளது.

முடிவாக

தமிழில் எண்ணற்ற கலைச்சொற்கள் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. அது படித்தவர்களிடம் முக்கியமாக, தமிழ்ப் பேராசிரியர்களிடம் புழக்கத்தில் உள்ளதா? என்பது சந்தேகத்திற்குரியது. இதில் மாணவர்களுக்குக் கொண்டு சேர்ப்பது எத்தன்மையில்? என்ற கேள்வி எழுகிறது. ஆசிரியர்கள் தங்களது வாசிப்பை அதிகப்படுத்தினால்தான் மாணவர்களிடம் கொண்டுபோய் சேர்க்கமுடியும். கற்றவர்கள் அனைவருக்குமான கையேடு இந்நூல். கற்றவர்கள் என்றால் பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் மட்டுமல்ல. பலதுறை சார்ந்த முக்கியமாக, ஊடகத்துறை, இலக்கியப் படைப்பாளர்களுக்கு ஆனது என்பதை கவனத்தில் கொண்டு இந்நூலை வாங்கி வாசிப்பது அவசியமாகிறது.

அத்துடன் பாமர மக்களின்மொழி இலக்கண வடிவத்திற்குள் நிலைகொண்டிருப்பதையும் கற்றறிந்தவர்கள் இலக்கணத்தை மீறி செயலாற்றுவதையும் பொதுவெளியில் ஒரு சொல் ஒரு கருத்தாக நிலைபெற்றுவிட்டால் அதைக் கற்றறிந்த சமூகம் ஏற்றுக்கொள்ளலாம் என்பதை இந்நூல் விளக்குகிறது.

துணைநூற் பட்டியல்

1. பெரியார், (2016), பெரியார் இன்றும் என்றும், (முதற்பதிப்பு), கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.

2. முத்துநிலவன், நா., (2024), தமிழ் இனிது, (முதற்பதிப்பு), சென்னை: இந்து தமிழ் திசை.

References

1. *Periyar, (2016), Periyar Today and Forever, (First Edition), Coimbatore: Vidiyal Publishing House.*

2. *Muthunilavan, N., (2024), Tamil Inithu, (First Edition), Chennai: Hindu Tamil Mantra.*

Cite this Article in English

Chinnasamy.P " 21st Century Tamil and Power Politics" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.2 Issue 1, January 2025, pp. 9-14*

பழந்தமிழரின் உணவுப் பண்பாடும் சில புரிதல்களும்

The Food Culture of the Tamils and Some Understanding

3

கவிதா.பா, தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 004.

Kavitha.P, Department of Tamil, PSGR Krishnammal College For Women, Coimbatore - 641004

ORCID ID: https://orcid.org/0000-0003-3198-8739

இராஜேந்திரன்.ந, தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 014

Rajendran.N, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore - 641004.

ORCID ID: https://orcid.org/0000-0001-7113-9374

DOI: 10.5281/zenodo.14719911

Abstract

Food is the most basic need of the human race. We know from anthropological research that food culture has developed silently in the context of human civilization passing through various stages. Food is not only physical. It is also mental and cultural. The ancient Tamils fulfilled their needs without any deficiency with the types of food grown in the environment in which they lived. It can be seen that the habit of eating without luxury and simplicity was prevalent among the ancient Tamils. The ancient Tamils developed their food culture according to the need and production of food according to the land, water, environment and seasonal changes in which they lived. They not only ate that food themselves but also enjoyed giving it to others. This article attempts to examine this with some understanding based on the records contained in the ancient Tamil literary songs.

ஆய்வுச்சுருக்கம்

மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளில் முதலிடம் வகிப்பது உணவு. மனித நாகரிகம் பல்வேறு படிநிலைகளைக் கடந்து வந்த சூழலில் உணவுப் பண்பாடும் சத்தமில்லாமல் சேர்ந்தே வளர்ந்ததை மானிடவியல் ஆய்வுமுடிவுகளின் வாயிலாக அறிகின்றோம். உணவு என்பது உடல் சார்ந்தது மட்டும் அல்ல. அது மனம் மற்றும் பண்பாடு சார்ந்ததாகவும் உள்ளது. பழந்தமிழர்கள் தாம் வாழ்ந்த சூழலில் விளைந்த உணவுவகைகளைக் கொண்டு குறைவில்லாமல் தம் தேவைகளை நிறைவேற்றிக்கொண்டனர். ஆடம்பரமற்ற எளிமையான உணவுப் பழக்கமே பழந்தமிழர்களிடம் பரவிக்கிடந்தது என்பதை அறியமுடிகிறது. பழந்தமிழர் தங்களது உணவுப் பண்பாட்டினைத் தாங்கள் வாழ்ந்த நிலம், நீர், சூழல், பருவ மாற்றத்திற்கு ஏற்றவாறு உணவின் தேவையையும் உற்பத்தியையும் உருவாக்கிக்கொண்டனர். அவ்வுணவினைத் தாங்கள் மட்டும் உண்ணாது பிறருக்குக் கொடுத்தும் மகிழ்ந்துள்ளனர். இதனைப் பழந்தமிழ் இலக்கியப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பதிவுகளின் அடிப்படையில் சில புரிதல்களோடு ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

Keywords: *Food culture of Ancient Tamil, Food in Tholkappiyam, Ancient Tamil foods*, பழந்தமிழனின் உணவுப்பண்பாடு, தொல்காப்பியத்தில் உணவு, பண்டைய தமிழரின் உணவுகள், சமையல் வகைகள்.

முன்னுரை

நாடோடியாகத் திரிந்தவன் எப்போது ஆற்றங்கரையைத் தேர்வு செய்து குடில் அமைத்து தங்க ஆரம்பித்தானோ அப்போதே உணவுக்கான தேடலும் வளர்ச்சியும் தொடங்கிவிட்டது. உணவுத் தொடர்பான தேடுதலே அவர்களது பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிவகுத்தது. இதனையே 'உண்டி முதற்றே உலகு' என்று கூறுகின்றனர். சங்க இலக்கியத்தில் காணப்படும் உணவுக் கலாச்சாரம் தமிழர்களின் பண்பாட்டு வளர்ச்சிக்குச் சான்றாகும். இலக்கியத்தில் உணவு என்பதற்குக் காணப்படும் குறிப்பு பெரும் ஆச்சரியத்தைத் தருவதாக உள்ளது. 'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' என்பதுதான் அது. இந்தப் புரிதல் மிக மிக நுட்பமானதும் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதும் ஆகும். ஒவ்வொரு உணவினுடையக் கூறும் நிலத்தையும் நீரையும் சார்ந்திருக்கிறது என்ற புரிதல் சங்க இலக்கிய காலத்திலேயே தமிழர்களிடம் இருந்திருக்கிறது. மேலும் உண்ணுதல் என்பது ஓர் உடல் சார்ந்த தேவையாக இல்லாமல் சமூகம் சார்ந்த செயலாகவே சங்க காலத்தில் அணுகப்பட்டுள்ளது. அக்காலத்தில் விருந்தினர்களுக்கு உணவு படைப்பதற்குக் கொடுக்கப்பட்ட முதன்மையும் குடும்பம் மற்றும் ஊர் சார்ந்த நிகழ்வுகளில் உணவு பெற்றிருந்த சிறப்பும் உணவின் சமூகச் சார்பினைப் புலப்படுத்துகின்றன. மேலும் மனிதன் உயிர் வாழ்வதற்குரிய உணவினைக் கொடுப்பது மிகவும் போற்றுதலுக்குரியதாகப் பார்க்கப்பட்டது. இதனையே 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற பழமொழியும் எடுத்துக்கூறுகின்றது. இதனடிப்படையில் சங்கத் தமிழரின் உணவுப் பண்பாட்டைச் சில புரிதல்களுடன் அணுகுகிறது இக்கட்டுரை.

தொல்காப்பியத்தில் உணவு

பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியம் உணவைக் கருப்பொருட்களுள் ஒன்றாக வைத்ததோடு மட்டுமல்லாமல் அந்தந்த நில அடிப்படையில் ஒவ்வொரு திணைக்குமான உணவு வகைகளையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளது. இதனை,

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப" **(தொல்.பொருள்.அகத்.நூ.17)**

என்னும் நூற்பா சுட்டுகிறது. மேலும் தொல்காப்பியப் பொருளதிகார மரபியலில் நால்வருணத்தார் பற்றிய பகுதியில் வணிகர்களுக்கு எட்டு வகையான உணவுப்பொருட்களை உருவாக்கும் தொழில் உரியது என்பதை,

"மெய்தெரி வகையின் எண்வகை உணவின்
செய்தியும் வரையார் அப்பாலான" **(தொல்.பொருள்.மர.நூ.79)**

என்னும் நூற்பா காட்டுகிறது. தொல்காப்பியம் தமிழர் வாழ்வியலை ஐந்தாகப் பகுத்திருந்தாலும் நிலம் சார்ந்த பண்பாட்டு மாற்றங்கள் மற்றும் இயற்கையமைவுகளுக்கு ஏற்பவும் உணவுகளும் சமைக்கும் முறைகளும் வேறுபட்டிருந்தன என்பதனைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்கும்.

வ.எண்	திணை (நிலம்)	உணவு	நீர்
1	முல்லை	வரகு, சாமை	கான்யாறு
2	குறிஞ்சி	தினை, தேன், மூங்கிலரிசி	அருவி நீர், சுனை நீர்

3	மருதம்	செந்நெல், வெண்ணெல்	ஆற்று நீர், மனைக்கிணற்று நீர், பொய்கை நீர்
4	நெய்தல்	உப்புக்கு விலை மாறிய பண்டம், மீனுக்கு விலை மாறிய பண்டம்	மணற்கிணறு, உவற்குரிநீர்
5	பாலை	ஆறலைத்த பொருள், சூறை கொண்ட பொருள்	ஆற்று நீர் கூவல், சுனை நீர்

பழந்தமிழரின் உணவுகள்

தமிழிலக்கியத்தில் காணப்படுகின்ற தரவுகளைக் கொண்டு தனது 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்' என்ற நூலில் பண்டைய தமிழரின் உணவு பற்றிய குறிப்புகளைத் தந்துள்ளார்.

"சங்ககாலத்தில் 'மடை நூல்' என்னும் பெயரில் வீமசேனன் என்பவர் எழுதிய சமையற்கலை நூல் இருந்தது என்று சிறுபாணாற்றுப்படைப் பாடல் கூறுகிறது. மேலும், உணவின் சுவைகளை ஆறாகப் பிரித்தறிந்தனர். அவை, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு, கைப்பு, புளிப்பு ஆகியன. இவை முறையே ஆற்றல், வீறு, வளம், தெளிவு, மென்மை, இனிமை ஆகிய வற்றைத் தருவன. இதை நம் முன்னோர் அறுசுவையாக அமைத்துக் கொண்டாடினர்". (உணவு எனும் பண்பாடு, (June.21.2022))

பண்டைய தமிழர்கள் வாழ்ந்த நிலத்திற்கேற்பவும் குலத்திற்கேற்பவும் உணவுகள் வேறுபடுகின்றன. எனினும், பெரும்பாண்மையானோர் சோறும் மரக்கறியும் புலாலுணவும் மதுவும் விரும்பியுண்டுள்ளனர் என்பது தெரிகின்றது. நெற்சோறு, வரகுச்சோறு, வெண்ணெற்சோறு, நண்டுக்கறி, உடும்புக்கறி, வரால்மீன் குழம்பு, கோழியிறைச்சி, வற்றல், பன்றியிறைச்சி, முயல், ஈசல், மாங்கனிச்சாறு, மாதுளங்காய் - மிளகுப்பொடி, கறிவேப்பிலைப் பொறியல், ஊறுகாய் எனத் தமிழ்நாட்டில் வாழ்ந்த பலதரப்பட்டோர் உண்ட உணவுகளைத் தமிழிலக்கியச் சான்றுகளோடு அ.தட்சிணாமூர்த்தி விவரித்துள்ளார்.

வட்டம்

வட்ட வடிவிலான உணவுப் பொருள். ஆப்பம், அப்பம், இடியாப்பம்

"பாசிலைக் குருகின் புன்புற வறிப்பூ
கார்அகல் கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால் கலந்தவைபோல்
நிழல்தாழ் வார்மணல் நீர் முகத்து உறைப்ப" **(பெரும்.376-379)**

கூவியர் என்போர் அப்ப வாணிகர். மணற்பரப்பிலுள்ள குழியில் நீரில் உதிர்ந்து கிடக்கும் குருக்கத்தி மலரைப் போல பாலில் போடப்பட்ட வட்டம் மிதந்துகொண்டிருக்கிறது. எனவே இங்கே வட்டம் என்பது வட்டவடிவிலான அப்பத்தைக் குறிக்கிறது.

வத்தம்

"பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல்
வளைக்கை மகடூஉ வயழன் அறிந்து அட்ட

சுடர்க்கடைப் பறவைப் பெயர்படு வத்தம்

சேதா நறுமோர் வெண்ணெயின்" (பெரும்.302-306)

பெரும்பாணர் குடும்பத்தினர் மருத நிலத்தின் வழியாகச் செல்லும் போது அங்கிருக்கும் ஒரு வீட்டில் அவர்களுக்குக் கிடைக்கும் அரிசிச் சோற்றைப் புலவர் வத்தம் என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பதிவு செய்யப்பெற்றுள்ள உணவு என்பது வயிறு சம்மந்தப்பட்டது மட்டும் அல்ல. அது மனது சம்மந்தப்பட்டதும் கூட. உணவு என்பது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் அன்பைக் கூட்டும்; கணவன் மீது மனைவி கொண்ட பிணக்கை, மன வருத்தத்தை நீக்கும் ஒர் ஆயுதம். இதனை,

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ

குவளை உண் கண் குயப்;புகை கழுமத்

தான் துழந்துஅட்ட தீம் புளிப் பாகர்

இனிது எனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒள்நுதல் முகனே!" (குறுந்.167)

எனும் பாடல் சான்று பகர்கிறது.

புறநானூற்றில்

"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்

உடைப் பெருஞ் செல்வர் ஆயினும், இடைப் படக்

குறுகுறு நடந்து, சிறு கை நீட்டி,

இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்" (புறநா.188.1-4)

என்ற பாடல் வரிகள் தன் குழந்தை தானே சாப்பிடுவதைக் கண்டு பேரானந்தம் கொள்ளும் தாயின் மன உணர்வினை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

தான் சமைத்த உணவினைத் தன் கணவனும் குழந்தைகளும் சாப்பிடுவதைப் பார்த்து மனம் மகிழ்வது ஒரு வகை. பிறருக்குக் கொடுத்து மகிழ்வது மற்றொரு வகை. இதனை, ஆற்றுப்படை இலக்கியத்தில், பாழடைந்த கண்ணோடும் கிழிந்த ஆடையோடும் வரும் புலவனைக் கண்டு அழைத்துச் சென்று புத்தாடை உடுத்தச்சொல்லி, செம்மறி ஆட்டுக்கறியைத் தாய் தன் குழந்தைக்குப் பரிமாறுவதைப் போல மன்னன் புலவனுக்குப் பரிமாறி மகிழ்ச்சி அடைந்துள்ளான். புலவன் சிறிது நாள் கழித்து கறியைத் தின்று தின்று தன் கடவாய்ப் பல் தேய்ந்து போனதாகக் கூறுகிறான். இதனடிப்படையில் உணவு என்பது வெறும் உடல் சம்மந்தப்பட்டது அல்ல. அது தாய்மையுணர்வு சம்மந்தப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

மேலும் உணவுக்காகக் காத்திருந்து உண்ணும் வழக்கம் புலவர் பெருமக்களிடம் இல்லை என்பதை ''எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே'' (புறநா.206) என்ற பாடல் புலப்படுத்துகிறது. ஔவையார் பசியைவிட மானமே பெரிது என்று எண்ணி அதியமானிடம் கோபித்துக்கொண்டு செல்லுவதை மேற்குறித்த பாடல் எடுத்துரைக்கிறது. உணவு என்பது மான உணர்வுடன் தொடர்புடையது என்பதையும் இதன்வழி புரிந்துகொள்ள முடிகிறது.

வ.எண்	சங்க இலக்கியத்தில் உணவு குறித்த சொற்கள்	பொருள்	பாடல் எண்கள்
1	மோதகம்	கொழுக்கட்டை	(மது.625-626)
2	மூரல்	பொலு பொலுவென்று வெந்த சோறு	(பெரும்.168), (அகம்.60.4), (பெரும்.196)
3	மிளிர்வை	குழம்பிலிடும் மீன் அல்லது கறித்துண்டு	(நற்.60.4-5)
4	மிதவை	சோறு, கூழ் அல்லது கஞ்சி, பொங்கல், பால்சோறு, வெண்ணெய்	(மலை.435), (அகம்.37.13), (அகம்.86.1), (அகம்.340.15), (புறம்.215.4), (மலை.417)
5	பொம்மல்	சோற்றுக் குவியல் பெருமளவு சோறு	(நற்.60.4-6),(மலை.168-169)
6	அமுது	இனிய சுவையுடைய அமிழ்தம் போன்ற உண்டி	(பெரும்.472-476)
7	பிளவை	பிளக்கப்பட்ட இறைச்சித் துண்டு	(மலை.176-177)
8	வேவை	வேகவைத்த உணவு	(பொரு.103 -104), (மலை.168 -169)
9	வல்சி	வாழ்க்கைக்கான உணவு	(பெரும்.197), (மலை.183-184), (குறுந்.295.4), (நற்.310.9), (ஐங்.365.2)
10	அயினி	விரும்பி உண்ணும் சிறந்த உணவு	(மலை.467),(நற்.254.7),(அகம்.141.14), (புறம்.77.8)
11	விசயம்	கருப்பஞ்சாறு, கருப்பட்டி, பாகு	(பெரும்.260-262), (மது.625,626), (மலை.444)
12	வாடூன்	உப்புக்கண்டம், வாடிய ஊன்	(பெரும்.99,100),(புறம்.328.4), (புறம்.386.4)
13	வறை	பொரித்த இறைச்சித் துண்டுகள்	(பொரு.115), (பெரும்.132,133), (மது.756) (புறம்.386), (புறம்.398.24)
14	பதம்	பக்குவமாக வேகவைத்த உணவு, சோறு	(மலை.157), (மலை.252), (குறுந்.383.2), (அகம்.301.4), (புறம்.353.10)
15	நுவணை	இடித்த மாவு, தினை மாவு	(மலை.445-446), (ஐங்.285.2), (பதிற்றுப்.30.24)
16	துழவை	குழைந்த சோறு	(பெரும்.275-276)
17	தாரம்	அரிய உணவு	(பெரும்.361), (மலை.513), (நற்.135), (பதிற்றுப்.48), (அகம்.171)

18	திற்றி	வேகவைத்த இளம் தசை	(அகம்.249.13), (பதிற்றுப்.18.2), (அகம்.97.5), (அகம்.113.16-17), (மது.211-212)
19	தடி	துண்டம், தசை	(நற்.60), (நற்.120), (பெரும்.345), (மலை.563), (அகம்.193.9), (அகம்.265.13)
20	சோறு	சமைத்த நெல்லரிசி	(சிறு.175), (நற்.281.6), (பதி.12.17), (அகம்.107.9), (புறம்.14.14), (பொரு.2)
21	சூடு	நெருப்பில் சுட்ட உணவு	(பட்.63), (புறம்.34.11), (சிறு.163), (சிறு.177), (பெரும்.282)
22	கலவை	குழம்பு	(சிறு.193-195),
23	உணவு	சாப்பிடத் தகுந்த ஒரு பொருள்	(பட்.267), (புறம்.18.21), (பெரும்.64), (மது.458)
24	உண்டி	சாப்பாடு	(பெரும்.454), (மலை.83),(குறுந்.156.4), (புறம்.18.19), (பரி.2.65-66), (கலி.85.25)
25	ஊண்	உணவு, புலால், ஒரே வகையாக அமைந்த உணவு	(பொரு.119), (மது.503), (நற்.22.7), (குறுந்.56.1), (கலி.50.13), (புறம்.173.4)
26	கருனை	பொரித்து எடுத்த உணவு	(பொரு.115), (நற்.367.3), (புறம்.395.37), (புறம்.398.24)
27	பண்ணியம்	திண்பண்டம், வணிகப்பொருள்	(மது.405), (பட்.203), (நற்.31.9), (பதிற்றுப்.59.15), (பரி.19.38)
28	புழுக்கல்	வேகவைத்து அவித்தது, சோறு	(பொரு.114), (பெரும்.100), (பெரும்.474), (நற்.83), (புறம்.363.12), (புறம்.399)
29	சொன்றி	சோறு, வேகவைத்த அரிசி	(பெரும்.131), (மது.212), (குறிஞ்.201), (நற்.281.5), (குறுந்.233.6), (பதிற்றுப்.24.22), (புறம்.197.12)
30	கூழ்	கூழ்ம நிலையிலுள்ள ஒரு வகை உணவு	(பெரும்.175), (அகம்.113), (பட்.163), (நற்.367.5), (பதிற்றுப்.90.45), (புறம்.70.7)
31	களி	கேப்பங்களி, கம்மங்களி, உளுந்தங்களி	(பெரும்.275), (அகம்.86.1), (புறம்.328.11)
32	அமலை	சோறு, சோற்றுத்திரள்	(சிறு.194), (பெரும்.224), (அகம்.196), (புறம்.33), (புறம்.34)

33	அடிசில்	சோறு, உணவு, சமைத்த உணவு	(சிறு.241), (பெரும்.476), (குறிஞ்.204), (பதிற்றுப்.45.13), (அகம்.394.11), (புறம்.10.7-8)
34	வாட்டு	நெருப்பில் வாட்டிப் பொரித்தது	(பெரும்.255-256)

இவ்வாறாக சங்க இலக்கியத்தில் பல்வேறுபட்ட உணவு வகைகள் பற்றியும் அவை எவ்வாறு சமைக்கப்பட்டன என்பது பற்றியும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் நன்கு விளக்குவதை அறியமுடிகிறது.

சமையல் வகைகள்/முறைகள்

பழங்காலத் தமிழர்கள் பல்வேறு வகையான சமையல் முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

1. நீரிலிட்டு அவித்தல்
2. அவித்து வேகவைத்தல்
3. வறுத்து அவித்து வற்றலாக்குதல்
4. நெருப்பில் சுடுதல்
5. வற்றலாக்குதல்
6. நெய்யிலிட்டுப் பொரித்தல்
7. வேகவைத்து ஊறவைத்தல்

போன்ற சமையல் முறைகளையும். கடுகுயிட்டுக் காய்கறிகளைத் தாளிப்பது, பசு வெண்ணெயில் பொரிப்பது, கெட்டித் தயிரைப் பிசைந்து தயிர்க் குழம்பு வைப்பது, கூழைத் தட்டுப் பிழாவில் ஊற்றி உலரவைப்பது, மோரில் ஈயலை ஊறப்போட்டு புளிக்கறி சமைப்பது, போன்ற பழந்தமிழர் சமையல் வகைகளையும் சங்க இலக்கியத்தில் காணமுடிகின்றது. இவற்றைத் தவிர தென்னங்கள், பனங்கள், வீட்டில் சமைத்த தோப்பி என்ற ஒருவகைக் கள் ஆகியவற்றையும் பழந்தமிழர்கள் விரும்பி உண்டுள்ளனர் என்பது தெரிகிறது.

அடுப்பு

நெருப்பினை மூட்டி உணவு சமைப்பதற்காக அடுப்புகளைச் பழந்தமிழர்கள் பயன்படுத்தியுள்ளமைக்கு

"ஆடுநனி மறந்த கோடுஉயர் அடுப்பின்" **(புறம்.164.1)**

"ஆண்தலை அணங்கு அடுப்பின்" **(மதுரை.29)**

"முடித்தலை அடுப்பு" **(புறம்.26.8)**

"களிபடுக் குழிசி கல் அடுப்பு" **(அகம்.393:14)**

"முரியடுப்பு" **(பெரும்.99)**

முதலிய சங்கப் பாடல் வரிகள் சான்றுகளாகின்றன. இவை போன்ற பல்வகையான அடுப்புகள் சங்க

காலத்திலேயே பயன்படுத்தியுள்ளனர் என்பதை மேற்குறித்த பாடல் வரிகளால் அறியமுடிகிறது. விலங்குகளின் இறைச்சியைத் தீயிலிட்டு வாட்டியுண்ணும் வழக்கமும் இருந்துள்ளது.

அட்டில்/சமையலறை

சங்க இலக்கியத்தில் உணவு சமைப்பதற்கென்றே தனி சமையல் அறைகள் இருந்துள்ளன. இதனை அட்டில் என்னும் சொல்லால் சங்க இலக்கியம் குறித்தள்ளது. இதனை,

"புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்" **(சிறு.132)**

"அறநிலைஇய அகனட்டில்" **(பட்.41.3)**

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

சமையல் பாத்திரங்கள்

சங்க இலக்கியத்தில் சமையல் செய்வதற்கான பாத்திரங்களைக் குழிசி என்னும் பெயரால் அழைத்துள்ளனர் பழங்கால மக்கள். அவை உட்குழிந்து இருந்ததால் இப்பெயரினைப் பெற்றிருக்கலாம்.

"இருங்கட் குழிசி" **(புறம்.65.2)**

"மான்தடி புழங்கிய புலவுநாறு குழிசி" **(புறம்.168.9)**

"முரவுவாய் ஆடுறு குழிசி" **(புறம்.371:5-6)**

"களிபடுக் குழிசி கல்லடப்பு" **(அகம்.393:14)**

இவை தவிர புகர்வாய்க் குழிசி, சோறடு குழிசி போன்ற சமையல் பாத்திரங்களையும் மக்கள் பயன்படுத்தியுள்ளனர். தணணீர் எடுத்துவரப் பயன்பட்ட பாத்திரத்தினை அகநானூறு

"தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்" **(நெடுநல்.65)**

எனக் குறிப்பிடுகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் மணப்பெண் பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்குச் செல்லும்போது சமையல் பாத்திரங்களையும் சில உணவு தானியங்களையும் கொண்டு செல்வது வழக்கமாக இருந்துவருகிறது. இவ்வழக்கமானது சங்கத்தமிழனின் உணவுப்பண்பாட்டின் நீட்சியாகவே புரிந்துகொள்ள முடிகிறது.

முடிவுரை

தமிழரின் உணவுப் பண்பாடானது மண் சார்ந்த வாழ்வியலோடும் பண்பாட்டோடும் இரண்டறக் கலந்துள்ளது. ஒவ்வொரு இனத்திற்கும் அதன் நிலம் சார்ந்த உணவு அடையாளங்கள் உண்டு என்பதைச் சங்கப் பாடல்கள் புலப்படுத்தியுள்ளன. மனித சமூகமானது தங்கள் வாழ்விடம், சுற்றுச்சூழல், இயற்கைவளம் ஆகியவற்றின் அடிப்படையில் தங்களது உணவுப் பண்பாட்டை அமைத்துக் கொண்டுள்ளது. அதனடிப்படையில் அவர்களது விருந்தோம்பல் பண்பும் மேலோங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. சமைக்கும் முறை, பரிமாறும் முறை, உண்ணும் விதம் என ஒவ்வொரு சமூகக் குழுவிற்குமிடையே வேறுபாடு இருந்துள்ளது. இத்தகைய சங்கத் தமிழனின் உணவுப் பண்பாட்டினைச் சில புரிதல்களோடு அணுகவேண்டியதும் அவசியமாகிறது.

சங்க காலத்தில் உணவுப் பண்பாட்டில் உயர்நிலையை எட்டியிருந்த தமிழ்ச் சமூகம் இன்று சமைப்பதனை விரும்பாமலும், சமைக்கப் பிடிக்காமலும், சமைக்கத் தெரியாமலும், சமைக்க நேரமின்மையாலும் உணவகங்களின் வாயில்களில் குடும்பம் குடும்பமாக வரிசைகட்டிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நடந்து செல்வதைத் தவிர்க்கும் சில சோம்பேறிகள் சுகியிலும் (swiggy)

சோமேட்டோவிலும் (zomato) ஆர்டர் செய்து சாப்பிட்டு வருவது வருந்தத்தக்க செயலாகவும் அச்சமூட்டுவதாகவும் உள்ளது.

துணைநூற் பட்டியல்

1. இளங்குமரன். இரா, 2003, சங்க இலக்கியம் புறநானூறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர் - 307, காரைக்குடி.

2. உணவு எனும் பண்பாடு https://www.tamizhkalam.com/unavu-enum-panpaadu/ June.21.202

3. கவிதா.பா, 2020, பன்முக நோக்கில் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள், தமிழ் நாற்றங்கால் பதிப்பகம், சிவகங்கை - 702.

4. சங்க இலக்கியம் முழுமையும், 2003, கோவிலூர் மடாலயம், காரைக்குடி.

5. சங்க இலக்கியம் மூலமும் உரையும், 2004, NCBH பதிப்பகம், சென்னை -98.

6. சங்க இலக்கியம் முழுமையும் (கலித்தொகை), NCBH பதிப்பு, சென்னை, 2004.

7. சாமிநாதையர்.உ.வே, 1935, புறநானூறு மூலமும் உரையும், லா ஜர்னல் அச்சுக்கூடம், சென்னை.

8. சாமிநாதையர்.உ.வே, 1986, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

9. சுப்பிரமணியன். சு.வே, 2008, தமிழ்ச்செவ்வியல் நூல்கள் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை -108.

10. தட்சிணாமூர்த்தி.அ, 1973, தமிழர் நாகரிகமும் பண்பாடும், வெற்றிச்செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர்.

11. தமிழண்ணல், 2011, தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 001.

12. விசுவநாதன். அ, 2004, கலித்தொகை (மூலமும் உரையும்), என்.சி.பி.எச் பதிப்பகம், அம்பத்தூர் சென்னை - 98.

References

1. Ilankumaran, Ra., 2003, Sangam Literature Purananoor, Kovilur Mutt, Kovilur-307, Karaikudi.

2. The Culture of Food https: / / www. tamizhkalam. com / unavu-enum-panpaadu / June. 21.202

3. Kavitha.Pa, 2020, Tamil Cultural Records from a Multifaceted Perspective, Tamil Nursery Publications, Sivagangai - 702.

4. Complete Sangam literature, 2003, Kovilur Math, Karaikudi.

5. Sangam Literature and Text, 2004, NCBH Publications, Chennai-98.

6. Entire Sangam literature (Kaliththokam) NCBH edition, Chennai, 2004.

7. *SAMINATHAYAR. U. V., 1935, by Purananuru and text, La Journal Press, Chennai.*

8. *Saminathayar.U.V., 1986, by Dattu Pattu and Natchinarkkiniyar Oration, Tamil University, Thanjavur.*

9. *Subramanian, S.V., 2008, Complete Tamil Anthology, Manivasagar Publications, Chennai-108.*

10. *Dakshinamoorthy. A, 1973, Tamil Civilization and Culture, Vetri Selvi Publications, Thanjavur.*

11. *Thamizhannal, 2011, Tholkappiyam, Meenakshi Book Centre, Madurai - 001.*

12. *Viswanathan A, 2004, Kalithogai (Source and Text) N. CPH Press, Ambattur, Chennai-98.*

Cite this Article in English

Kavitha.P, Rajendran.N "The Food Culture of the Tamils and Some Understanding" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.2 Issue 1, January 2025, pp. 15-24*

தமிழில் பதிகம் மரபும் பாயிர மரபும்

Pathikam and Payiramarabu Tradition in Tamil

4

மல்லிகா.வி, தமிழ்த்துறை, பூசாகோ அர கிருஷ்ணம்மாள் கல்லூரி, பீளமேடு, கோவை -641004

Mallika.V, Departmentvof Tamil, PSGR Krishnammal College for womens.Coimbatore-641004.

Orcid ID: https://orcid.org/0000-0002-4065-117X

DOI: 10.5281/zenodo.14719957

Abstract

The Tamil literature has followed a traditional grammatical system. It describes the method of composing the book, the beginning of the book and the nature of the book. Among them, the Padika tradition and the Payira tradition are noteworthy. One of the oldest classical literatures of the Tamil language is the singing of songs about a single subject in a single verse called Pathika. During the Sangam period, the Pathika system can be seen in the Pathitruppattu and Aingurunutra. As a stage of its development, Karaikkal Ammaiyarelangattu composed the book called Vuththira Thirupatipikam for the first time. Bhavanandiyar, as the tradition of Payira, states that although the Pathika system appeared in the Sangam period, it gained special influence in Tamil only after the emergence of the Alvars and Nayanmars.

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியங்கள் மரபு சார் இலக்கண முறையை பின்பற்றி வந்துள்ளது. நூல் இயற்றும் முறை, நூலின் தொடக்கம், நூலின் இயல்பு ஆகியவற்றை எடுத்துரைக்கின்றது. அவற்றுள் குறிப்பிடத்தகுந்த மரபு பதிக மரபும், பாயிர மரபும். தமிழ் மொழியின் பழமையான பிரபந்த இலக்கியங்களில் ஒன்று ஒரு பொருளை பற்றி ஒரே யாப்பில் பாடல்களாக பாடுவது பதிகம் எனப்படும்.சங்ககாலத்தில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூற்றில் பதிக அமைப்பைக் காணலாம். இதன் வளர்ச்சி நிலையாக முதன் முதலில் காரைக்கால் அம்மையாரே திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்னும் நூலை பாடினார். பதிக அமைப்பு சங்க காலத்திலேயே தோன்றினாலும், ஆழ்வார்கள், நாயன்மார்களின் தோற்றத்திற்கு பிறகு தான் இது தமிழில் தனி செல்வாக்கு பெற்றது. இறைவனார் களவியலுரை பாயிரம் பற்றிய செய்திகளை குறிப்பிட்டுள்ளது. எந்நூல் உரைப்பினும் அதற்குப் பாயிரம் உரைப்பது மரபு என்கிறது .பாயிரம் ஆனது 1. பொதுப்பாயிரம் 2.சிறப்புப்பாயிரம் என இரண்டு வகைப்படும். நூலின் பெருமையை புரிந்து கொள்வதற்கு பொருத்தமான பல்வேறு பெருமைகளைப் புறத்தே நின்று கூறுவது புறவுரை.

Keywords: பாயிரம், பதிகம், நன்னூல், மரபு, நன்னூல், பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம், *Paiyaram, Pathikam, Nannool, Genealogy, Nannool, General Paiyaram, Special Paiyaram*

முன்னுரை

தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி. அதன் இலக்கிய மரபு தொன்றுதொட்டு வளம் பெற்று வருகிறது. தமிழ் இலக்கியங்கள் மரபு சார் இலக்கண முறையை பின்பற்றி வந்துள்ளது. நூல்

இயற்றும் முறை, நூல் தொடக்கம் நூலின் இயல்பு ஆகியவற்றை எடுத்துரைக்கின்றது. அவற்றுள் குறிப்பிடத்தகுந்த மரபு பதிக மரபும், பாயிர மரபும். எந்த இலக்கிய நூலாயினும் பதிகம், பாயிரம் கூறி நூலைத் தொடங்குதல் மரபு. தமிழ் பதிகமரபு, பாயிர மரபை ஆய்வதாக இக் கட்டுரை அமைகிறது.

பதிகம்

தமிழ் மொழியின் பழமையான பிரபந்த இலக்கியங்களில் ஒன்று ஒரு பொருளை பற்றி ஒரே யாப்பில் பாடல்களாக பாடுவது பதிகம் எனப்படும். இதனை "பப்பத்தாய் எத்துரையும் பாடல் பதிகம் மதே" (திருமால் பத்து பதிகம்,ப.10) என சுவாமிநாதம் வரையறை செய்கின்றது.

சங்ககாலத்தில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூற்றில் பதிக அமைப்பைக் காணலாம். இதன் வளர்ச்சி நிலையாக முதன் முதலில் காரைக்கால் அம்மையாரே திருவாலங்காடு மூத்த திருப்பதிகம் என்னும் நூலை பாடினார். பாயிரத்தின் மரபைக் பவனந்தியார்குறிப்பிடுகிறார். பதிக அமைப்பு சங்க காலத்திலேயே தோன்றினாலும், ஆழ்வார்கள், நாயன்மார்களின் தோற்றத்திற்கு பிறகு தான் இது தமிழில் தனி செல்வாக்கு பெற்றது.

பதிக உருவாக்கம்

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உரையை தொடங்கும் முன் "இது பால் வகை தெரிந்த பதிகத்தின் மரபு" (சிலப்பதிகாரம் ப. 5) உரைப்பாயிரத்தில் குறிப்பிடுவதன் மூலம் பதிகத்தின் தொன்மையை கண்டறியலாம்.

பதிகம் என்பது எதைச் சொல்ல வேண்டுமோ அதை சொல்வது. அடியார்க்கு நல்லார் பதிகச் செய்யுளைப் பயன்படுத்தினார். இடைக்காலத்திற்கு பிறகு பயன்படுத்தப்பட்ட சொல் பாயிரம். பாயிரமானது முகவுரை கூறுதல், பெருமை பேசுதல் என்ற நிலைகளில் வெளிப்படுகின்றன. எடுத்துக்காட்டாக "வீரன் தன் படை முன் பெருமை பேசுதல்" போன்றதாகும். உரையாசிரியர்கள் எழுதினார்கள். உள்ளது உள்ளபடியே கூறினார்கள்.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

பதிக முறையில் பாடப் பெற்ற முதல் பாடல்கள் என்பதால் இதனை ஆதிப் பதிகம் என்று அழைப்பர். முதன்முறையாக இறைவனை இசையால் பாடியதால் காரைக்கால் அம்மையாரை "தமிழிசையின் தாய்" என்ற சிறப்புப் பெயரால் அழைப்பர். காரைக்கால் அம்மையை பின்பற்றிய இறைவனை இசையில் தேவாரம் பாடினார். சிவபெருமான் மீது பாடப்பட்ட திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். இவரால் பாடப்பட்டது. இவரைத் தொடர்ந்த்து பிற்காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பதிகம் பாடினர்.

இறைவனார் களவியலுரை

இறைவனார் களவியலுரை பாயிரம் பற்றிய செய்திகளை குறிப்பிட்டுள்ளது. எந்நூல் உரைப்பினும் அதற்குப் பாயிரம் உரைப்பது மரபு என்கிறது

"ஆயிரம் முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் அல்லது பனுவல் அன்றே." **(இறையனார் களவியலுயரை ப.3)**

பருப்பொருளகிய பாயிரம் கேட்டவருக்கு நுன்பொருள் இனிதாக விளங்கும். பாயிரம் கூறுதல் மரபு

என்ற உரைக்கப்படும் நூல் இறைவனார் களவியலுரை.

பாயிரத்தின் வகை

பாயிரமானது" பாயிரம் பொதுச் சிறப்பென இருபாற்றே" (நன்னூல்,ப.3). 1. பொதுப்பாயிரம் 2.சிறப்புப்பாயிரம் என இரண்டு வகைப்படும். பொதுப்பாயிரம் நான்கு வகைப்படும் அவை

"ஈவோன் தன்மை யீதலியற்கை
கொள்வோம் நன்மை கோடல் மரபென
ஈரிரண்டு டன்ப பொதுவி னியற்கை" (இறைனார் களவியலுயரை, ப.5)

ஆசிரியனது தன்மையை, அவன் உரைக்கும் முறைமை மாணவனது தன்மை, கேட்கும் முறைமை ஆகவே பொதுப்பாயிரத்தில் கூறப்பட வேண்டும்.

சிறப்புப்பாயிரம் எட்டு வகைப்படும் அவை ஆக்கியோன் பெயர் , எல்லை, பெயர், யாப்பு, முதலிய பொருள் கேட்போர் , பயன் இவற்றை எடுத்துக் கூறுதல் இயல்பு என்பார்.

நன்னூல்

பாயிரம் பற்றிய அறிமுக நூலாக நன்னூல் அமைகின்றது அணிந்துரை, முகவுரை தந்துரை பற்றி குறிப்பிடுகிறது. மேலும் தற்புகழ்ச்சி குற்றமாக இடமாக கூறும் பொழுது " மண்ணுடை மன்றத் தோலை தூக்கினும்

தன்னுடை யாற்றல் உணரா ரிடையினும்
மண்ணிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னை புகழ்தலுந் தகும் புலவோர்க்கே" (நன்னூல், ப.35)

அரசனது சபையில், தன் கல்வி வலிமையை அறியாதவர்களிடத்திலும், பெரிய சபையில் வாதம் செய்யும் பொழுதும், தன்னை எதிரி பழித்த காலத்திலும், தன்னைத்தான் புகழ்ந்து கொள்வதே புலவர்க்குரியது என்று பாயிரத்தின் மரபாக பவணந்தியார் குறிப்பிடுவதன் மூலம் பாயிர மரபை அறிய முடிகிறது.

புறவுரை

நூலின் பெருமையை புரிந்து கொள்வதற்கு பொருத்தமான பல்வேறு பெருமைகளைப் புறத்தே நின்று கூறுவது . பாயிரம் என்பது முன்னுரை, பதிகம் அணிந்துரை, நூல் முகம், தந்துரை புனைந்துரை என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. பதிகம்என்பது கற்பிக்கப்படுகின்ற பொருள், பதிகம் கற்பித்தல் மரபு. களவியல் காலத்தில் மரபுரையாக இருந்த பாயிரம், நன்னூலார் காலத்தில் உரைத்தலாக மாறுபட்டு உரை கூறும் மரபாக உருவெடுத்தது. சான்றாக மயிலை நாதர் உரை, சங்கர நமச்சிவாயர் உரை, நச்சினார்க்கினியர் உரை, இளம்பூரனார் உரை. இதில் நூல் எழுதும் மரபை நன்னூலார் இணைத்து கூறுவதைக் காணலாம். சிவஞான முனிவரும், சங்கர நமச்சிவாயரும் பாயிரம் என்பது நூலின் வரலாற்றை கூறுவது என்பர். பதிகம் என்பது பனுவலைப் பொருள் முறிவு கொள்ளாது கொள்வது. இறைவனார் களவியலுரைத் தோற்றுவித்த மரபு, காலப்போக்கில் பாயிரம் அணிந்துரை, புறவுரை, முகவுரையாக மாற்றம் பெற்றது.

தொல்காப்பியம்

நன்னூலரை அடுத்துத் தொல்காப்பியம், பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் பற்றி குறிப்பிடுகின்றது.

தண்டியலங்காரம்

தற்சிறப்புப் பாயிரம் என்று பாயிரத்திற்கு கடவுள் வாழ்த்து கூறும் முறையாக தண்டியலங்காரம் உரைக்கின்றது.

" சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி
சிந்தை வைத்து இயம்புவல் செய்யுட்டகு அணியே" **(தண்டியலங்காரம், ப.17)**

மேலும் சிறப்பு பாயிரத்தில்,

"பூவிரி தண்பொழில் காவிரி நாட்டு
வம்பவில் தெரியல் அம்பிகாபதி
மேவரும் தவத்தினில் பயந்த
தாவரும் கீர்த்தி தண்டியென் பவனே" **(தண்டியலங்காரம், ப.16)**

முடிவுரை

ஒரு நூலைத் தொடங்கும் போது அதற்கு பதிகம் பாடுதல் என்பது தமிழில் மரபாகக் காணப்படுகிறது. இறையனார்களவியலுரையில் வித்திட்டு தொல் இலக்கணங்களான நன்னூல், தொல்காப்பியம், பழமொழி நானூறு, சிலப்பதிகாரம், தற்கால உரைச் செய்யுளாக உருவெடுத்துள்ளது என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது. பாயிரல்லாமல் பனுவல் எழுத முடியாது என்ற மரபைத் தோற்றுவித்த தன்மையும் அறிய முடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், முனைவர் தமிழண்ணல், மணிவாசகர் பதிப்பகம், 31 ,சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 6000108.

2. நன்னூல், ஆறுமுக நாவலர், காண்டிகை உரை, முல்லை நிலையம்,43, புதுத்தெரு, சென்னை-1, 1994.

3. சிலப்பதிகாரம், டாக்டர்.உ.வே.சா, 2, கடற்கரைச்சாலை,பெசன்ட் நகர், சென்னை - 600 090.2008.

4. தண்டியலங்காரம், இராம சுப்ரமணியம், முல்லை நிலையம், 9, பாரதி நகர், முதல்தெரு,சென்னை -600 017. 2009.

5. திருமால் பத்து பதிகம் . வண்ணச்சரப தண்ட பாணி சுவாமிகள், தமிழ் இலக்கியத் துறை, சென்னை, பல்கலைக்கழகம், மே 2006.

References

1. *Tholkappiyam, Writer, Doctor Tamilanal, Manivasagar Publications, 31, Singer Street, Parimunai, Chennai -6000108.*

2. *Nannool, Arumuga Novelar, Kandigai Text, Mullai Station, 43, Pudhuderu, Chennai-1, 1994.*

3. *Silappadikaram, Dr. U.V.Sa, 2, Beach Road, Besant Nagar, Chennai 600.090.2008.*

4. *Dandiyalangaram, Ramasubramaniam, Mullai Station, 9, Bharathi Nagar, Mudalteru, Chennai 600.017.*

5. *Thirumala Ten Verse. Swamigal, Department of Tamil Literature, University of Chennai, May 2006.*

Cite this Article in English

Mallika.V " **Agapadalkal Pathikam and Payiramarabu in Tradtion Tamil**" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.2 Issue 1, January 2025, pp. 25-29*

பொருநராற்றுப்படையில் வாழ்வியல் கூறுகள்

5

Biological elements in Porunaratruppadai

திலகவதி. அ, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641 006

Thilagavathi.A, Ph.D Research Scholar, Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore – 641 006

ORCID ID: https://orcid.org/0000-0003-3265-5629

பிரேம் குமார். ரா, தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641 006

Prem Kumar R, Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore – 641 006

ORCID ID: https://orcid.org/0000-0003-3265-5629

DOI: 10.5281/zenodo.14719993

Abstract

Sanga literature is referred to as Pattu Thogai. In this, Pattu means ten literature and Thogai means eightfold. A large part of the Pattuppat is composed of Aarthupadai texts. In these books, the poets explain about the kings, their hospitality, the food and clothing of the citizens, and the elements of life through people like Panar, Virali, Porunan etc. Aartuppadai literature is a time-piece that explains the various phases of the life of artists like Panar, Virali, Prativana, etc. Porunan's life in a state of poverty with his neighbors, Karikaal Peruvalathan's love for artists like Porunan, the richness of the river Cauvery, the mind-blowing amount of land resources, and the fact that women composed music and sang songs can be known through Porunaratupadai. When Porunan and his entourage were traveling in the land of milk, the milky water was enough to make them faint if they met the people on the way. The high morals of the ancient people were that others like them should also get all the riches they got. This article shows that the people of that time lived a long life in poverty.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியத்தினைப் பாட்டு, தொகை என்று குறிப்பிடுகிறோம். இதில் பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். பத்துப்பாட்டில் பெரும் பகுதி ஆற்றுப்படை நூல்களாக அமைந்துள்ளது. இந்த ஆற்றுப்படை நூல்களில் பாணர், விறலி, பொருநன் போன்றவர்களின் வாயிலாக மன்னர்கள் பற்றியும், அவர்களின் விருந்தோம்பல் தன்மை பற்றியும், குடிமக்களின் உணவு உடை இருப்பிடம் பற்றியும், உயிரினக் கூறுகள் பற்றியும் புலவர்கள் விளக்கிக் காட்டுகின்றனர்.

பாணர், விறலி, பொருநன் போன்ற கலைஞர்களின் வாழ்வியலைப் பல்வேறு படிநிலைகளாக விளக்கும் ஒரு காலக்கண்ணாடியாக அமைவது ஆற்றுப்படை இலக்கியம். வறுமை நிலையில் வாழ்ந்த பொருநன் தன் சுற்றத்தாருடன் வாழ்ந்த சூழல் பற்றியும், கரிகால் பெருவளத்தான் பொருநன் போன்ற கலைஞர்களுடன் கொண்ட அன்பையும், காவிரி ஆற்றின் செழுமையையும் , திணை மயக்கம் கொள்ளும் அளவிலான நில வளங்களையும், பெண்கள் இசையமைத்துப் பாடியுள்ளனர் என்பதையும், பொருநராற்றுப்படை வழி அறியலாம்.

பொருநன் தன் சுற்றத்தாரோடு பாலை நிலத்தில் பயணம் மேற்கொள்ளும் போது வழியே ஆரலைக் கள்வர்கள் எதிர்ப்பட்டால் அவர்களை மதிமயக்கம் கொள்ளச் செய்யும் அளவினதாக பாலை யாழ் இருந்துள்ளது. தான் பெற்ற பெருவளங்கள் அனைத்தையும் தன்னைப் போன்ற பிறரும் பெற வேண்டும் என்பதே பண்டைத்தமிழரின் உயரிய வாழ்வியல் நெறியாக இருந்துள்ளது. வறுமையிலும் செம்மாந்த வாழ்வை வாழ்ந்தவர்கள் அக்கால மக்கள் என்பதை உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

Keywords: *Karikalan, Porunar, Sanga Ilakkiyam, Biologocal, Yazh, Marudham Land,* கரிகாலன், பொருநர், சங்க இலக்கியம், வாழ்வியல், யாழ், மருத நிலம்.

முன்னுரை

ஆற்றுப்படை இலக்கியம் என்பது வேறு எந்த மொழி இலக்கியங்களிலும் இல்லாத ஒன்று. ஆற்றுப்படுத்தல் என்பதை சங்க அக நூல்களிலும் காண முடிகிறது. தோழியானவள் தலைவியையும், தலைவனையும் ஆற்றுப்படுத்தும் விதமாகவும், செவிலித்தாய் நற்றாயை ஆற்றப்படுத்தும் விதமாகவும் ஆற்றுப்படைகள் அமைகிறது. புற நூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற புற நூல்களில் சிறு பாடல்களாக ஆற்றுப்படுத்தலைக் காண முடியும். அதுவே பத்துப்பாட்டு பாடல்களில் ஆற்றுப்படைகள் பல நூறு வரிகளை கொண்டதாக அமைவதற்கு காரணமாகியுள்ளது.

தமிழர்களின் பண்பாடு, உணவுப் பழக்கவழக்கம், மரபு, அறிவுப் பெருக்கம், ஆட்சி அமைப்பு, போன்றவற்றை ஆற்றுப்படை நூல்கள் வாயிலாக உணர முடியும். அந்த வகையில் சோழ நாட்டின் மன்னனாக இருந்த கரிகால் பெருவளத்தானின் பண்பட்ட அறிவு, பழக்க வழக்கம், ஆட்சி அமைப்பு, மற்றும் பொருநர்கள் விருந்தோம்பலாக நின்றபோது அவனது விருந்தோம்பல் பண்பு, பொருநர்களின் வறுமை நிலை, கரிகாலனைச் சந்தித்த பின்னர், பொருநரின் செல்வநிலை போன்றவற்றை அழகுற முடத்தாமக் கண்ணியார் விளக்கி அமைத்த பொருநராற்றுப்படை மூலமாக பொருநனின் வாழ்வியலைச் சுட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

பொருநர் சொல் விளக்கம்

புகழ்ந்து பாடுவோருக்குப் பொருநன் என்று பெயர். பொருநர் என்ற சொல்லை பொரு+ந்+அர் என்று பிரித்தல் வேண்டும். பொருதல் என்றால் போர் செய்தல், ஒப்பாக இருத்தல் என்பது பொருள். பொருநன் என்ற சொல்லுக்குப் படைவீரன், உவமைக்கப்படுபவன், கூத்தன், நடிகன் எனப் பல பொருட்கள் உண்டு. இங்கு பாடி நடிக்கின்ற பொருநனைக் குறிப்பிடுகின்றது. இப்பாட்டில் கூறப்பெறும் பொருநன் தடாரி பறை கொட்டிப் போர்க்களம் பாடுவோன்.

பாட்டுடைத் தலைவனும் புலவரும்

பொருநராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகால் பெருவளத்தான். இவன் சோழன் உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன். இளமையில் நெருப்பால் சுடப்பட்டதால்

கால் கரியாயிற்று என்பதால் கரிகாலன் என்ற பெயரை பெற்றதாகவும் கூறுவர். (1) பாடிய புலவர் முடத்தாமக் கண்ணியார் ஆவார். முடம் என்ற சொல் உறுப்பு குறைவைக் குறிப்பிடுகிறது. தாமக்கண்ணி இவருடைய இயற்பெயராக இருக்கலாம். ஆர் என்பது சிறப்பு விகுதி. இவர் சங்க இலக்கியத்தில் இந்த ஒரு பாடலை மட்டுமே பாடியுள்ளார். எனவே இவரைப் பற்றிய குறிப்புகள் வேறு ஏதும் அறியப்படவில்லை. இவர் கரிகால் பெருவளத்தான் காலத்தில் வாழ்ந்தவராக இருக்க வேண்டும் என்பதை இவரது பொருணராற்றுப்படை நூல் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது.

ஆற்றுப்படுத்தும் விதம்

கரிகால் பெருவளத்தானிடம் பரிசு பெற்று திரும்பிய பொருநன், வறுமை நிலையில் உள்ள பரிசில் பெற விரும்பும் பொருநனை எதிர்கொண்டு அறியாமையின் காரணமாக மறு வேறு வழியில் செல்லாமல் நான் வந்த வழியில் எதிரே வந்தது நீங்கள் செய்த தவப்பயன் என்று கூறி வழிநடத்தும் விதமாக அமைவது பொருநராற்றுப்படை.

யாழ் பற்றி தொல்காப்பியர்

யாழ் என்பதற்கு நரம்புகளால் ஆக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்பது பொருள். யாழ் பற்றிய குறிப்பினைத் தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியலில் கருப்பொருள்கள் பதிநான்கினுள் ஒன்றாக பின்வருமாறு தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

"தெய்வம் உணவே மா மரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப" **(தொல். அகத்.19) பக். 414**

என்னும் நூற்பாவில் தெளிவுத்துகிறார். "தெய்வம் மக்கள் உணவு விலங்கு முதலான 14 கூறுகளும் மக்கள் வாழும் நிலத்தில் கரு கொண்டுள்ளன. இவை நிலத்தின் தன்மைக்கேற்ப வகை மாறுபடும்" (வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு -பாக்கிய மேரி -142) கருப்பொருள்களில் ஒன்றாக யாழ் இருந்துள்ளது என்பதைக் கொண்டு அந்நிலத்தில் வாழும் மக்களின் வாழ்வியலை அறியமுடிகிறது.

பாலை யாழின் அமைப்பும் தன்மையும்

யாழின் உறுப்புகளாக பத்தல், தோல், போர்வை, ஆணி, தண்டு, வார், கட்டு போன்றவை சுட்டப்படுகின்றன. இதில் பத்தல் என்பது யாழின் குடம் போன்ற அமைப்புடையது. தோல் என்பது விளக்கில் இருந்து வெளிப்படும் சுடரின் நிறத்தைப் போன்று இருந்தது இழுத்துக்கட்டப்பட்ட நரம்புகள் என்றும், கருவுற்று சில மாதங்களே ஆன பெண்ணின் மேல் வயிற்றில் உள்ள ஒழுங்குபட்ட மயிரிழை ஆனது இரண்டு புறமும் இழுத்து கட்டப்பட்ட போர்வை போன்று இருந்தது என்றும், அப்போர்வை உறுப்பைச் சேர்ப்பதற்கு போடப்பட்ட துளைகளில் உள்ள ஆணியின் தலைப்பானது நண்டின் கண்களை ஒத்ததாக இருந்தது என்றும், யாழின் அமைப்பை மிக நுணுக்கமாக முடத்தாமக் கண்ணியார் விளக்கியுள்ளார். அதோடு நில்லாமல்

"மணம்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்கு மெய்ந் நின்ற அமைவரு காட்சி
ஆறு அலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலைப் பெயர்க்கும் மருவுஇன் பாலை " **(பொருநர், வரிகள்: 19 - 22)**

மேலும், பாலை யாழானது மணமகளை ஒப்பனை செய்தார் போன்ற அழகு பெற்று இருப்பதாக

குறிப்பதோடு, வழிப்பறி செய்யக்கூடிய கள்வர்களும் அத்தொழிலை விட்டுவிட்டு, நல்வழிக்கு மாற்றிவிடும் வகையில் அமைந்தது பாலை யாழின் இசை என்று யாழின் தன்மையை மேற்கண்ட பாடல் குறிப்பிடுகிறது.

பாடினியின் தோற்றம்

"வருந்து நாய் நாவின் பெருந்தகு சீறடி
அரக்கு உருக்கு அன்ன செந்நிலன் ஒதுங்கலின்
பரற்பகை உழந்த நோயொடு சிவணி
மரல்பழுத்த மறுகு நீர் மொக்குள்
நண்பகல் அந்தி நடைஇடை விலங்கலின்
பெடைமையில் உருவின் பெருந்தகு பாடினி" (பொருநர், வரிகள்: 42 - 47)

மென்மையான கால்கள் ஓடி இலைத்த நாயின் நாக்கு போன்று இருந்தது. பரல் கற்கள் நிறைந்த சிவந்த நிலத்தில் நடந்ததால் பாடினியின் பாதங்களில் கொப்புளங்கள் நீர்த்துளிகள் வைத்திருந்தன; அது ஒரு மரமே பழுத்தது போன்று இருந்தது. மேலும் நண்பகலிலும், மாலையிலும் பயணம் செய்யாத காரணத்தால் பாடினியானவள் பெண் மயிலை போன்றிருந்தாள் இன்று. இவ்வாறு பாடினியின் முடி முதல் அடி வரையிலான வர்ணனை அமைந்துள்ளது.

காடுரை தெய்வம் பயண வழிபாடு

"வலைவலந் தன்ன மென்நிழல் மருங்கில்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை" (பொருநர். வரிகள்: 51-52)

பொருள்தேடி காட்டு வழி பயணம் செய்வதால் காட்டில் உறையும் தெய்வமாகிய கொற்றவையை வழிபட்டு தங்களது பயணத்தை சுற்றதாரோடு தொடர்கிறான் பொருநன். பல விதமான விலங்குகள் வசிக்கக்கூடிய காட்டிடை தங்கியிருப்பதால் அவற்றால் தமக்கு ஊறுனேராமல் இருக்க கொற்றவை வழிபாடு மேற்கொண்டுள்ளனர்.

"இடைநெறி கிடந்த இயவுகொள் மருங்கின்
புடைநெரிப் போயோர் பொய்கையில் சென்று
நீர் நசை வேட்கையின் நெடுந்துறை நிற்பக்
கானுறை தெய்வம் காதலி சென்று" (சிலம்பு – வரிகள்: 168 - 171)

கோவலன் நீர் வேட்கை ஏற்பட அருகில் இருந்த பொய்கையில் சென்று நீர் அருந்த எண்ணும்போது வசந்த மாலை உருவில் காடுரை தெய்வம் தோன்றி கோவலனை மயக்கம் செய்ய முற்படுகிறது என்ற செய்தி மூலமாக கானுறை தெய்வ வழிபாடு பற்றி அறியமுடிகிறது.

கரிகாலனின் விருந்தோம்பல் பண்பு :

பழுத்த பழங்கள் உள்ள மரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப் போல நானும் என் சுற்றத்தாரும் காவிரிபூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட கரிகால பெருவளத்தான் நகரத்தை நாடிச் சென்றோம். அழுக்கடைந்த அகன்ற தடாரிப்பறையை இசைத்துப் பாடல்களைப் பாடினோம்.

"ஈரும் பேணும் இருந்து இறை கூடி

வேரோடு நனைந்து வேற்றுஇழை நுழைந்த

துன்னர் சிதாஅர் துவர நீக்கி,

நோக்கு நுழைகல்லா நுண்மைய, பூக்கனிந்து

அரவுஉரி அன்ன,அறுவை நல்கி,

மழைஎன மருளும் மகிழ்செய் மாடத்து **(பொருநர்.வரிகள்: 79 - 84)**

முன்பே நட்பு கொண்டவன் போன்று எங்களை வரவேற்று வேர்வையால் நனைந்து கிழிந்து தைத்திருந்த ஈரும் பேனும் இணைந்திருந்த அழுக்கான ஆடையை நீக்கி விட்டு பாம்பின் தோல் போன்ற மென்மையான பூத்தொழிலுடைய ஆடையை எங்களுக்கு வழங்கினான். கிழிந்து தைத்திருந்த ஆடை எங்களுக்குள் தாழ்வுநிலையை ஏற்படுத்துமோ என்று கண்ட நொடியில் பூத்தொழிலுடைய ஆடையை வழங்கியதோடு பொற்கலங்களில் தேறலை ஊற்றித் தந்து எங்கள் வழித்துன்பத்தைப் போக்கி மகிழ்ந்திருக்கச் செய்தான் கரிகால பெருவளத்தான்.

"துராஅய் துற்றிய துருவை அம்புழுக்கின்

பரா அரை வேவை பருகு எனத்தண்டி" **(பொருநர் வரிகள்: 103 -104)**

அருகம்புல்லைத் தின்று கொழுத்த செம்மறி ஆட்டு கிடாயின் இறைச்சியை வேகவைத்துக் கொடுத்தான். அதன் தொடை இறைச்சியை சுடச்சுட தந்தான். இறைச்சி உணவு போதும் போதும் எனும் அளவிற்கு தந்து இறைச்சிக்கு மாற்றாக பலவகையான பனியாரங்களை உண்ணக் கொடுத்தான். அதோடு நிற்காமல், சிறந்த யாழையும் இயக்கி விறலியரை பாடச் செய்து மகிழ்வித்தான். விறல் போன்ற அரிசி உணவையும் பொரிக்கறியையும் கழுத்து வரை உண்ணத் தந்தான். இவற்றையெல்லாம் உண்டப் பற்கள் வயலை உழுத கலப்பையின் கொலுவை போல மழுங்கி விட்டது. இவற்றையெல்லாம் மகிழ்வோடு உண்டு வழி துன்பம் அனைத்தையும் மறந்து பொருநனை மகிழ்ந்திருக்கச் செய்தவன் கரிகால் பெருவளத்தான். இதை போலவே பின்வரும் பாடலும் அமைந்துள்ளது.

"காம்பு சொலித் தன்ன அறுவை உடீஇப்

பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கிக்

காஎரி ஊட்டிய கவர்கணைத் தூணிப்

பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்

.....

ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டித் " **(சிறுபாணா.வரிகள்: 236 - 245)**

சூரியனே தோற்கும் அளவிலான பொன்னாலான பாத்திரத்தில் பீமசேனன் எழுதிய சமையல் சாத்திரத்தின் படி சமைத்த உணவை வைத்துக்கொண்டு அவனே நின்று ஊட்டும் அளவிற்கு சிறந்த விருந்தோம்பல் பண்பாளனாக நல்லியங்கோடன் விளங்கினான் என்பதை சிறுபாணாற்றுப்படை பாடல் விளக்குகிறது.

மருதநில வளம்

மருத நிலத்து மக்கள் காக்கைக்கு பழிச்சோற்றினை படைத்தனர் என்பது, மருத நிலம் நெல் விளைந்த நன்நிலமாக இருந்தது என்பதை காட்டுகிறது. மேலும் பழிச்சோற்றை உண்டு உண்டு சலித்துப்போன காக்கைகள் நொச்சி மரத்திடையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ஆமைக் குட்டிகளை உண்டன; காஞ்சி மரத்திலும், மருத மரத்திலும் இருந்த மயில்கள் பாகல் பழத்தையும்,

பலாப்பழத்தையும் உண்டு ஆரவாரித்த வண்ணம் இருந்தன என்பதை,

"செஞ்சோற்றப் பலிமாந்திய
கருங்காக்கை கவவு முனையின்
மனைநொச்சி நிழல்ஆங்கன்
ஈற்றுயா மைதன் பார்ப்பு ஓம்பவும்" (பொருநர், வரிகள்: 183 -186)

என்ற வரிகள் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது. மேலும், காவிரி நாட்டின் மருதநில வளமானது தித்தனது ஆட்சியில்,

"மழை வளம் தரூஉம் மாவண் தித்தன்
கழைநிலை பெறாஅர் காவிரி நித்தம் (அகம், பாடல்.6, வரிகள்: 4 - 5)

நெற்குவியல்களை உடையதாக இருந்துள்ளது. தித்தன் ஆண்ட உறையூரில் காவேரி ஆற்றின் நீர் பெருக்கம் அதிகமாக இருக்கும். அங்கே வாழும் பிற உயிர்களான களிறும், பிடியும், நீர் நாயும், வள்ளைக் கொடியும் செழிப்பாக இருக்கும் என்பது போன்ற கருத்துக்கள் மருதநிலமானது நீர்ப்பெருக்கம் மிக்கதாகவும் பிற உயிர்கள் மகிழ்ந்திருக்கும் வண்ணமும் இருந்தது என்பதற்குச் சான்றாக உள்ளது.

பண்டமாற்று முறை

நில அடிப்படையிலான வாழ்வியலில் ஒரு நில மக்கள் மற்றொரு நில மக்களிடம் தம் பொருளைக் கொண்டும் கொடுத்தும் பண்டமாற்று முறை செய்து வந்துள்ளனர் என்பதை,

"தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யோடு நறவு மறுகவும்" (பொருநர், வரிகள்: 214 - 215)

குறிஞ்சி நில மக்கள் தேனையும் கிழங்கையும் கொடுத்து, நெய்தல் நில மக்களிடம் மீனையும் கல்லையும் பெற்றுக் கொண்டனர். மருதநில மக்கள் கரும்பையும் அவுலையும் கொடுத்து, இறைச்சியையும் மதுவையும் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதை மேற்கண்ட பொருநராற்றுப்படை பாடல் மூலமாக அறிய முடிகிறது.

பெரும்பாலும் சங்ககாலத்தில் பண்டமாற்று முறையிலேயே வாணிகமானது நடைபெற்று வந்துள்ளது என்பதற்குப் பொருநராற்றுப்படையில்,

“நெய்விலை கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்ஆன் கருநாகு பெறூஉம் " (பெரும், வரிகள்: 164 - 165)

மருதநில மக்கள் தயிரைக் கடைந்து அதிலிருந்து நெய்யை எடுத்து, அதனை விற்று அதற்கு மாற்றுப் பொருளாக பொன்னால் பொருள்களை வாங்காமல் எருமை, பசு, கன்று போன்ற இவற்றை வாங்கினர் என்று பண்டமாற்றுமுறை குறித்து விளக்கப்படுகிறது. பொன் பொருட்களைக் காட்டிலும், அடிப்படை வாழ்வாதாரமே மக்களுக்கு முக்கியமாக இருந்துள்ளது என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

மன்னனின் ஆட்சித்திறம்

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" **(குறள் – அறம். 231)**

கொடைத் தன்மையும் குன்றாத புகழும் தவிர வாழ்க்கைக்கு ஆக்கம் தரக்கூடியது வேறு எதுவும் இல்லை என்ற குறளுக்கு ஏற்ப கரிகால்பெருவளவனின் ஆட்சி அமைந்திருந்தது என்பதை,

"குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்
நறும் பூங்கண்ணி குறவர் சூடக்
கானவர் மாருதம் பாட அகவர்" **(பொருநர், வரிகள்: 218 - 220)**

நெய்தல் நில மக்கள் குறிஞ்சிப் பண்ணைப் பாடி மகிழ்ந்திருக்கின்றனர். குறிஞ்சி நில மக்கள் நெய்தல் மலர்களையும் முல்லை நில மக்கள் மருதப் பண்ணையும் பாடி மகிழ்கின்றனர் என்பது கரிகால் வளவன் சோழ நாட்டை ஒரு குடையின் கீழ் செழுமையாக ஆண்டான் என்பதைப் புலப்படுத்துகிறது.

காவிரி ஆற்றின் சிறப்பு

வெள்ளி விண்மீனானது வட திசையில் நிற்காமல் தென்திசைக்கு வந்தால் மழையானது பொய்த்துப் போகும். மழை பெய்யாமல் போனாலும் மழைத் துளியை உணவாகக் கொள்ளும் வானம்பாடி என்னும் பறவை வருந்தும். இவ்வாறு மழை பொய்த்துப் போனாலும் குடகுமலையில் தோன்றும் காவிரியானது பொய்க்காமல் அது பாயும் பகுதிகள் யாவும் பொன் கொழிக்கும் வளமுடையதாக இருக்கும் என்று பின்வரும் பட்டினப்பாலை பாடல் வாயிலாக காவிரி ஆற்றின் தொடக்கத்தையும், காவிரி பாயும் பகுதிகள் செழுமை வாய்ந்ததாக இருக்கும் என்பதையும் அறிந்துகொள்ளும் விதமாகப் பட்டினப் பாலையின் தொடக்கத்திலேயே கடியலூர் உருத்திரக்கண்ணனார் காவிரியின் சிறப்பைக் குறிப்பிடுகிறார்.

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடல் காவிரி
புனல்பரந்து பொன்மொழிக்கும்" **(பட்டினப்பாலை, வரிகள்: 5 - 7)**

இத்தகைய காவிரியானது கரிகால் வளவன் ஆள்கிற சோழநாட்டில்,

"நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
துறைதுறைதோறும் பொறை உயிர்த்து ஒழுகி
நுரைத்தலைக் குரைபுனல் வரைப்புஅகம்புகுதொறும்
புனல்ஆடு மகளிர் கதுமெனக் குடைய" **(பொருநர், வரிகள்: 238 - 241)**

அகிலையும், சந்தனத்தையும், நரந்தத்தையும், புல்லையும், பிள்ளையையும் ஒவ்வொரு துறையிலும் கொண்டு வந்து சேர்த்தது. நுரையோடு கூடிய வெள்ளமானது, ஆற்றிலும் குளத்திலும் பெருகிட, சோழ நாட்டு மகளிர் எல்லாம் புது வெள்ளம் கண்டு மகிழ்ந்து நீராடினர் என்பது காவிரி ஆற்றின் சிறப்பையும், வறட்சி நிலையை போக்கி நாட்டை செழிப்படையச் செய்த நிலையையும் பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது.

நாரைகள் செயல்வழி நிலவளம் உணர்த்தல்

நாட்டில் நீர் வளம் நிறைந்த வயல்வெளிகள் இருந்தது. அவ்வயல்களில் நெல்லையும் கரும்பையும் ஆரவாரமான பாட்டின் ஓசையோடு மருதநில மக்கள் அறுவடை செய்கின்றனர். மகளிரின் பாட்டோசையும் அறுவடை செய்யும் ஓசையும் தாங்காத நாரையானது, கொடி படர்ந்த மரத்திற்குச் செல்கிறது. நாரை அங்கேயும் வெறுத்து சோலை வளங்களை உடைய நெய்தல் நிலத்திற்குச் செல்கிறது. பின்பு முல்லைப் பகுதிக்குச் செல்கிறது. மீண்டும் முல்லையும் பிடிக்காமல் சுறா மீன்கள் வாழ்கின்ற கடலில் இறாலைப் பிடித்த திண்ண நெய்தல் நிலத்தில் உள்ள புன்னை மரத்தில் தங்குகிறது. அங்கே கடலில் அலைகளின் ஓசைக்குப் பயந்து அவ்விடத்தையும் விட்டு குறிஞ்சி நிலத்தின் பனை மரத்தில் வந்து தங்குகிறது என்பதும்,

"அரை கரும்பின் அரி நெல்லின்
இனக்களமர் இசை பெருக
வறள் அடும்பின் இவர் பகன்றைத்
....
ஓங்கு திரை ஒலிவெரீஇ
தீம் பெண்ணை மடல் சேப்பவும்" (பொருநர், வரிகள்: 193 - 207)

இதன்மூலம் சோழ நாடானது, நான்கு நிலங்களும் அருகருகே இருந்து வளம் செழித்த பகுதிகளாகவும் இருந்துள்ளது என்பதை உணர்த்துகிறது.

முடிவுரை

கருப்பொருள்களின் துணை கொண்டு நில அடிப்படையிலான பாகுபாட்டை அறிந்து கொள்ள முடிகிறது. கொடைத்தன்மையும், குன்றாத புகழ் திறமும் விருந்தோம்பல் பண்பும் மன்னரின் தலையாய கொள்கையாக இருந்துள்ளது. நீர்வளம் என்பது நாட்டின் பல்வேறு வகையான வளர்ச்சி நிலைக்கு அடித்தளமான ஒன்றாக இருக்கிறது என்பது காவிரி ஆற்றின் சிறப்பின் வாயிலாக அறியமுடிகிறது. இறைச்சி உணவோடு அரிசி, உணவு, பழ வகைகள் என்ற பலவற்றையும் மன்னர்கள் உணவாகக் கொண்டுள்ளனர். மக்கள் அந்தந்த நிலங்களில் கிடைத்த கிழங்கு, தேன், தினை, பால், மீன் போன்றவற்றை உணவாகக் கொண்டுள்ளனர் என்பது மன்னர், மக்கள் இருவருக்குமான உணவியல் வேறுபாட்டை உணர்த்துகிறது. சங்க காலம் முதல் இக்காலம் வரையில் பெண்கள் உடல் சார்ந்து, தோற்றம் சார்ந்து வர்ணித்தல் என்பது பொதுவான ஒன்றாகவே வழங்கி வருகிறது என்பது பொருநன் மற்றும் புலவர் இருவருக்குமான வேறுபாட்டினை இனம் கண்டுகொள்ள முடிகிறது. மன்னரே குற்றம் செய்தார் எனினும் அதனை இடித்துரைக்கும் அல்லது எடுத்துரைக்கும் திறன் பெற்றவராக புலவர்கள் இருந்துள்ளனர் என்பது புறநானூறு போன்ற எட்டுத்தொகை நூல்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. அதுவே ஆற்றுப்படை நூல்களில் வரும் பொருநன், விறலி, பாணன் போன்றோர் தங்களது வறுமை நிலையை போக்கிக்கொள்ளும் விதமாக மன்னனைப் புகழ்ந்து மட்டுமே பாடி பரிசில் பெறுகின்றனர். எவ்வாறாயினும் மன்னர்கள் மற்றும் மக்களின் வாழ்வியல் சூழல், பிற உயிர்களின் வாழ்வியல் சூழல், உணவுமுறை, பழக்க வழக்கம், அணிகலன்கள், பொழுதுபோக்கு, உழவுத்தொழில் என்ற அனைத்திலும் சங்க காலத்தில் இருந்து இக்காலம் வரையில் சிற்சில மாறுபாடுகள் மட்டுமே காணப்படுகின்றனவே ஒழிய முற்றிலும் மாறுபட்டவையாக இல்லை என்பதை அறிய முடிகிறது. முடியாட்சி என்பது முடி மன்னனைச் சார்ந்த அல்லது அவனது புகழ் பாடுவோருக்கு நன்மை பயக்கும் விதமாக இருந்தது என்பதை ஆற்றுப்படை நூல்கள் வழி அறியலாம்.

துணைநூற் பட்டியல்

1. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம் (எழுத்து,சொல்,பொருள்), ஏப்ரல் 2010, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை – 600 014

2. பேரா.முனைவர் பாக்கியமேரி, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு(செம்மை மற்றும் விரிவுப் பதிப்பு), முதற் பதிப்பு 2014, பூவேந்தன் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை - 600 004

3. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு, சென்னை – 600 104

4. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், கௌரா பதிப்பகம் நாராயணா கிருஷ்ணராஜ புரம், திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

5. கலைஞர் உரை, திருக்குறள், பதிமூன்றாம் பதிப்பு -2013, திருமகள் நிலையம், சென்னை – 600 017

6. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 104

7. முனைவர் பா.கவிதா (பதிப்பாசிரியர்), சங்க இலக்கியத்தில் இனவரைவியல், 2023, மசிவன் பதிப்பகம், 111/199 ஆ. கூடலூர், விழுப்புரம் – 605 755

8. மயிலை சீனி வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்ககாலம்), ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை – 600 017

9. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், 184 பிராட்வே, சென்னை – 600 108

10. அ.திலகவதி மற்றும் முனைவர் ம.சிவபாலன். “பெரும்பாணாற்றுப்படையில் பயணக் கூறுகள்: Travel Components in Perumpanatruppadai”. PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol.3, No.3, July 2023, Pages, 10-21, https://pulamejournal.com/index.php/pulam/article/view/137. DOI: 10.5281/zenodo.8109846

11. A.Thilagavathi, and Dr Sivabalan M. “சிறுபாணாற்றுப்படையில் பயணக் கூறுகள்: Travel Components in Cirupanatruppadai”. PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol.3, No.2, Apr. 2023, Pages, 27-34, https://pulamejournal.com/index.php/pulam/article/view/127. DOI: 10.5281/zenodo.7879864

Refences

1. Ilampuranar (Editor), Tolkappiyam (Letter,Word,Meaning), April 2010, Sharatha Publishing House, Rayapetta, Chennai - 600 014.

2. Pera.Munavar Bhakyamery, A History of Tamil Literature Towards Diversity (Refined and Expanded Edition), First Edition 2014, Bhuventhan Publishing House, Mylapore, Chennai - 600 004

3. *S.V.Subramanian, Sanga Literature Patupattu Source and Exposition, Manivasakar Publishing House, Fifth Edition, Chennai - 600 104*

4. *Puliyurkesikan, Silappathikaram Source and Text, Gaura Publishing House Narayana Krishnaraja Puram, Tiruvallikeni, Chennai – 600 005*

5. *Artist's Text, Thirukkural, Thirteenth Edition - 2013, Thirumal Sadiyam, Chennai – 600 017*

6. *S.V.Subramanian, Sangha Literature Octopus, Manivasakar Publishing House, Chennai – 600 104*

7. *Dr.B.Kavitha (Editor), Ethnography in Sangha Literature, 2023, Masivan Publishing House, 111/199 b. Kudalur, Villupuram - 605 755*

8. *Mailai Seeni Venkatasamy, Ancient Tamil Commerce (Sangakalam), Sri Senpaha Publishing House Chennai – 600 017*

9. *M. Varatharasan, Nature in Palanthamil Literature, Pari Station, 184 Broadway, Chennai - 600 108*

10. *A. Thilakavathy, and Dr. M. Sivapalan. "Travel Components in Perumpanatruppadai". PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol. 3, No. 3, July 2023, 10-21, https://pulamejournal.com/index.php/pulam/article/view/137. DOI:* 10.5281/zenodo.8109846

11. *A.Thilagavathi, and Dr Sivabalan M. "Travel Components in Cirupanatruppadai". PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol. 3, No. 2, Apr. 2023, 27-34, https://pulamejournal.com/index.php/pulam/article/view/127 DOI:* 10.5281/zenodo.7879864

Cite this Article in English

Thilagavathi.A, Prem Kumar R "Biological elements in Porunaratruppadai" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.2 Issue 1, January 2025, pp. 30-39*

சங்க பெண்பாற் புலவர்கள் அஞ்சில் அஞ்சியார் , வருமுலையாரத்தியார் காலத்து சமூக நிலை

6

Social Status During The Times of Sangam Female Poets Anchil Anjiyaar and Varumulaiyaaraththiyaar

வசந்தி.வே, முனைவர் பட்ட ஆய்வாளர், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி – 17

Vasanthi V, Ph.D Research Scholar, Bishop Heber College, Trichy-17

ORCID ID: https://orcid.org/0009-0002-4583-9347

DOI: 10.5281/zenodo.14720055

Abstract

More than forty female poets have been lived in sanga literarture period. The songs talk about the place of women in the society of that time and their social problems. In this way, the songs of two female poets, Anzil Anjiyar and Varumulaiyarathiyar, reveal the social position of the Sangam women. Women are also engaged in various professions to advance economic development at par with men for the development of society and family. Not only that, the songs of the two poets show that women lived in high and low status in the society of that time. The article explores the social situation of the time, the problems faced by women in it, and its culture.

ஆய்வுச்சுருக்கம்

சங்ககாலப் புலவர்களுள் பெண் புலவர்கள் நாற்பதுக்கும் மேற்பட்டோர் பாடல்கள் இயற்றியுள்ளனர். அப்பாடல்கள் அக்கால சமூகத்தில் பெண்களுக்கு இருந்த இடத்தையும், அவர்களின் சமூக சிக்கல்களையும் பேசுவதாக அமைந்துள்ளன. அந்த வகையில் அஞ்சில் அஞ்சியார், வருமுலையாரத்தியார் ஆகிய இரு பெண்பாற் புலவர்களின் பாடல்கள் சங்க கால மகளிரின் சமூக நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றன. மேலும் சமூகம் மற்றும் குடும்ப வளர்ச்சிக்காக ஆண்களுக்கு இணையாக பெண்களும் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். அது மட்டும் அல்லாமல் பெண்கள் அக்கால சமூகத்தில் உயர்நிலையிலும் தாழ்நிலையிலும் வாழ்ந்துள்ளனர் என்பது போன்ற தகவல்களை அவ்விரு புலவர்களின் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. அதனைக் கொண்டு அக்கால சமூகநிலையையும், அதில் பெண்களுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் குறித்தும், அதன் பண்பாடு குறித்தும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

Keywords: *Culture, Sangam literature, Female poet, Kalavu, Karpu*, பண்பாடு,சங்க இலக்கியம், பெண்பாற் புலவர்கள், களவு, கற்பு

முன்னுரை

சங்ககாலச் சமூக நிலையைச் சங்கப்புலவர்கள் தங்களின் எழுத்துக்களின் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர். அப்புலவர்களில் குறிப்பாக பெண்பாற்புலவர்களின் பாடல்கள், அக்கால மக்களின் வாழ்க்கை முறையினைப் பெண்களின் பார்வையில் காட்சிப்படுத்துவதாக அமைந்துள்ளன. பெண்ணியச் சிந்தனைகளைக் கொண்டுள்ள பெண்பாற்புலவர்களின் பாடல்கள் பெரும்பாலும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றன. பண்பட்ட தமிழ்

சமூகத்தின் இயல்பான வாழ்க்கை முறையினையும், இல்வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களையும் மற்றும் பெண்களின் புரட்சிகரமானச் செயல்களையும் பெண் புலவர்களின் எழுத்தின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது. சங்க பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அஞ்சில் அஞ்சியார் மற்றும் வருமுலையாரத்தியார் ஆகிய இருபுலவர்கள் தம் பாடல்களில் சங்ககால சமூகநிலையை சுட்டிக்காட்டியுள்ளனர் .

அஞ்சில் அஞ்சியார் மற்றும் வருமுலையாரத்தியார் :

சங்ககால பெண்பாற் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அஞ்சில்அஞ்சியார் மற்றும் வருமுலையாரத்தியார் ஆவர். அவர்களுள் அஞ்சில் அஞ்சியார் நற்றிணையில் மருதத்திணையின்கண் தோழிகூற்றாக அமைந்துள்ள 90 ஆம் பாடலைப் பாடியுள்ளார், “இவர்தம் இயற்பெயர் அஞ்சி என்பதாகும். அஞ்சில் என்பது இவர்தம் சொந்த ஊராக இருத்தல் வேண்டும்” (தாயம்மாள் அறவாணன் : 2004: ப-5). தலைவன் சார்பாகத் தன்னைச் சந்திக்க வந்த பாணனிடம் தலைமகளுக்கு வரைப்பது போன்று வாயிலை மறுத்துத் தோழி உரைப்பதாக இவருடைய பாடல் அமைந்துள்ளது.

வருமுலையாரத்தியார் பற்றிய குறிப்புகள் கிடைக்கப் பெறவில்லை. இவர் குறுந்தொகையில் 176 ஆம் பாடலை பாடியுள்ளார். களவு வாழ்வில் ஆண்களின் செயல்பாடும், தலைவன் தலைவி களவு பற்றி தோழி அறிந்த பின் தோழியின் செயல்பாடும்ஆகிய இரு நிகழ்வுகள் இப்புலவரின் பாடலில் வெளிப்பட்டுள்ளது. குறிஞ்சித் திணையில் அமைந்த தோழிக்கூற்று பாடலாக இப்பாடல் அமைந்துள்ளது. தன்னிடம் பலமுறையும் வந்த குறையிரந்து செல்லும் தலைவனுக்கு இரங்கித் தோழி தலைவியிடத்து சென்று ‘நீ தலைவனை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்’ என்று தோழி தலைவியிடம் குறைநயப்பக் கூறும் துறையில் அவருடைய பாடல் அமைந்துள்ளது. இவ்விருவர் பாடல்களிலும் அக்கால வாழ்க்கை முறை வெளிப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது .

பண்பாடு

மனித சமூகத்தின் மேம்பட்ட வாழ்க்கை முறையைப் பண்பாடு என்கின்றனர். பண்பாட்டு வளர்ச்சியின் காரணமாக மற்ற உயிரினங்களில் இருந்து மனிதர்கள் வேறுபட்டு காணப்படுகின்றனர். “மானுடவாழ்வின் ஒட்டுமொத்த வெளிப்பாடே பண்பாடாகும். பண்பாட்டின் வழியாகவே மனிதர்கள் தங்களின் தனித்துவங்களை வெளிப்படுத்துகிறார்கள்” (பக்தவத்சல பாரதி – 2018: ப-140) என்ற மானுடவியலாளர் கருத்தின் அடிப்படையில் பண்பாடு என்பது குறிப்பிட்ட சமூகத்தின் அடையாளமாகவும், அவர்களின் சமூக வளர்ச்சியையும் எடுத்துக்காட்டக்கூடியதாகும் உள்ளது. அவ்வகையில் சங்ககால தமிழர்களின் பண்பாட்டுக்கூறுகள் மற்ற சமூகத்திலிருந்து வேறுபட்டு தனித்துவமானதாக இருந்துள்ளதை சங்க இலக்கியங்கள் வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

பண்பாட்டு நிகழ்வுகள்

சங்க தமிழரின் பண்பாட்டு நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள அஞ்சில் அஞ்சியார் பாடல் வழிவகை செய்கிறது. அவர் குறிப்பிடும் தகவல்களால் அக்கால மக்களின் அன்றாட வாழ்க்கை முறையின் நடைமுறைகள் வெளிப்படுகின்றன. அம்மக்களின் வாழ்க்கை நடைமுறைகள் கீழ்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

- திருவிழாக்களின் காரணமாகப் பழமையான ஊரின்கண் கூத்தும், இசையும் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன
- ஆடைகளை துவைத்து தூய்மையாக அணிவதோடு மட்டுமில்லாமல், அவற்றை அரிசி கஞ்சியில்

இட்டு உலர்த்திய பருத்தி ஆடைகளை அணிந்துள்ளனர்

- புள்ளிய பூ வேலைப்பாடுகளைக் கொண்ட ஆடைகளைப் பயன்படுத்தியுள்ளனர்
- பனைநாரினைக் கயிறாகத் திரித்து ஊஞ்சல் கட்டி ஊஞ்சலாடியிருக்கின்றனர்
- பரத்தைமை எதிர்ப்பும், அதனை சரிசெய்ய அல்லது தடைசெய்யவும், சமூகத்திலிருந்து இக்கொடுமை ஒழுக்கத்தினை அகற்றும் அரசின் பங்களிப்பும் முக்கியமானதாகக் கருதப்பட்டுள்ளது.

இதுபோன்ற பண்பாட்டுக்கூறுகளை அஞ்சில் அஞ்சியார் பாடல் வழி அறிய முடிகின்றது. ''பண்பாடு என்பது இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள், தொழில்கள் போன்ற சில கூறுகள் மட்டும் ஆகாது. இது மக்களின் நடத்தைமுறைகளை கட்டுக்கோப்பான நிலையில் செயல்படுத்தும் ஒரு மிகப்பெரிய அமைப்பாகும்'' (பக்தவத்சல பாரதி : 2003: ப-154,155) என்பதிலிருந்து மக்களின் நடத்தைமுறைகள் கட்டுக்கோப்பாக இருப்பது பண்பாட்டுடன் தொடர்புடையதாக உள்ளதை விளங்கிக்கொள்ளலாம். அவ்வகையில் சங்கச் சமூகத்தில் நிலவும் கொடுமை ஒழுக்கமான பரத்தைமையைச் சரிசெய்யவேண்டிய கடமை அரசுக்கு உள்ளது என்னும் பண்பாட்டுச் செயலை அஞ்சில் அஞ்சியார் வலியுறுத்தியுள்ளார். இந்நிகழ்வுகள்,

"ஆடு இயல் விழவின் அழுங்கல் மூதூர்
உடையோர் பன்மையின் பெருங் கை தூவா,
வறன் இல் புலைத்தி எல்லித் தோய்த்த
புகாப் புகர் கொண்ட புன் பூங் கலிங்கமொடு
வாடா மாலை துயல்வர, ஓடி
பெருங் கயிறு நாலும் இரும் பனம் பிணையல்
பூங் கண் ஆயம் ஊக்க, ஊங்காள்,
அழுதனள் பெயரும் அம் சில் ஓதி
நல்கூர் பெண்டின், சில் வளைக் குறுமகள்
ஊசல் உறு தொழில் பூசல் கூட்டா
நயன் இல் மாக்களோடு கெழீஇ,
பயன் இன்று அம்ம, இவ் வேந்துடை அவையே !" **(நற்றிணை : பா- 90)**

எனும் நற்றிணை பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து சங்க கால மக்களின் திருவிழாக்கள், உடைகள்,பொழுதுபோக்கு, ஒழுக்கநெறிகள் போன்றவை குறித்து அறிந்து கொள்ள முடிகின்றது.

சமூகநிலை

சமூகம் என்பது மக்கள் குழுக்களின் நடத்தைமுறைகளையும், அவற்றுள் ஒழுங்கமைக்கும் விதிமுறைகளையும் உள்ளடக்கியதாகும். இச்சமூகத்தில் ஆணும் பெண்ணும் சமூக வளர்ச்சிக்காக உழைக்கின்றனர். அதனால் அச்சமூகத்தில் பண்பாட்டு வளர்ச்சியும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுகின்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பது சமூகத்தில் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. சங்ககாலத்து சமூகத்திலும் இந்நிலை நிலவியிருந்தது என்பதை வெளிப்படுத்தும் விதமாக விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலைத் தன் பாடலில் அஞ்சில் அஞ்சியார் பதிவு செய்துள்ளார்.அவர் 'வரன் இல் புலத்தி' என்று கூறுவதிலிருந்து , வறுமை

நிலையிலும் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. பாணர்களின் வறுமைநிலை போன்றே புலையரும் வறுமை நிலையில் இருந்துள்ளனர். இந்நிலையினைப் போக்குவதற்காகவே திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விளிம்புநிலை மக்களின் பொருளாதார நிலை மேம்படும் நோக்கிலேயே திருவிழாக்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன, நிகழ்த்தப்பட்டுக்கொண்டும் உள்ளன. ஏனெனில் "தமிழரது சமுதாய அமைப்பு தனிப்பட்ட இயல்புகளை உடையதாய் இருந்தது. இவ்வியல்புகள் சூழ்நிலையின் சிறப்பான தன்மைகளால் உருவாகின (கார்த்திகேசு சிவதம்பி – 2019: ப – 49). என்பதால்தான் இம்மாதிரியான திருவிழாக்கள் நடத்தப்பட்டு விளிம்பு நிலை கலைஞர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்க்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் திருவிழாக் காலங்களில் உற்றார் உறவினர்கள் திருவிழாக் காண வருவதால் ஊரின்கண் மக்கள் கூட்டம் அதிகரித்து, துணி துவைக்கும் தொழிலாளர்களுக்கும். மற்ற நாட்களை விட அதிக வேலைக் கிடைப்பதனால், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைகின்றது எனும் பண்பாட்டுக்கூறினை அஞ்சில் அஞ்சியார் காட்சிப்படுத்தியுள்ளார் .

பெண்கள் வீட்டு வேலைகளை மட்டும் செய்பவர்களாக இல்லாமல் தங்கள் குடும்பத்தின் வளர்ச்சிக்காகப் பொருள் ஈட்டும் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். இதனை "ஊரவர்களின் அழுக்கு உடைகளை எடுத்துச் சென்று நீரில் தோய்த்து வெளுக்கும் மக்களும் இருந்தனர். இத்தொழிலைச் செய்பவள் 'புலைத்தி' என்று அழைக்கப்படும் பெண்பாலராவர், "ஆடற்கலையில் ஆடவரும் பெண்டிரும் ஈடுபட்டனர். எனினும் பெண்பாலர் ஆடுதலே பெரும்பான்மை" (சண்முகம்பிள்ளை,மு-2004: பக் – 107 மற்றும் 213) என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கதாகும்.

"சங்க இலக்கியங்கள் காட்டுகின்ற ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் அரசு சார்ந்த அரசுச் சார்புடைய குடும்பமாக இருந்துள்ளதே அன்றி அரசுடனான தொடர்பு இல்லாத குடும்பமாக இல்லை" (மாதையன். பெ : 2010: ப-184) என்பதாக பெ.மாதையன் குறிப்பிடுகின்றார். இந்த அரசு சார்புடைய குடும்பம் எனும் அடிப்படையினைக் கொண்டு அஞ்சில் அஞ்சியாரும் பரத்தைமையை எதிர்க்காத அரசு பயனற்றது என்று 'பயன் இன்று அம்ம, இல் வேந்துடை அவையே' என்பதாகத் தம் பாடலில் குறிப்பிடுகிறார். இது குறித்து , "பரத்தையாகிய பெதும்பைப் பருவத்தினள், கரிய பனைநாரினால் திரித்த கயிற்றைப் புணித்துத் தொங்கவிட்ட ஊசலில் ஏறிப் பூப்போன்ற கண்களையுடைய தான் தோழியர் அவ்வூசலை ஆட்டவும் ஆடாதவளாய் அழுது அவ்விடம் விட்டுப் பெயர்வாள். அழகிய சிலவாகிய கூந்தலும் பெண் தன்மையில் சிறிது குறைந்த தன்மையும், சிலவாகிய வளையலும் கொண்ட அவ்விளம் பெண்ணை மீண்டும் ஊசலாடுகின்ற தொழிலின் ஆரவாரத்தில் ஈடுபடுத்த விருப்பமில்லாத மக்களோடு சேர்ந்து இவ்வேந்தனின் அவைக்களம் பயனற்றதாய் இருந்தது" (கு.வெ.பாலசுப்பிரமணியன் :2004: பக்- 162,163) என்பதாக அரசின் நிலை விளக்கப்பட்டுள்ளது.

மேலும் "செல்வந்தர்கள் மத்தியில் ஏற்பட்ட பரத்தைமை ஒழுக்கம் நாட்டின் பொதுவாழ்வில் எல்லா மக்களிடையேயும் இருந்ததென்று கருதுவது தவறாகும். சோழன் நலங்கிள்ளி தன்னை இகழ்ந்த பகைவரை வெல்லாமற் போனால் இன்னின்ன இழிநிலை தனக்கு வந்தெட்டும் எனக் கூறுகின்ற வஞ்சினத்தில் 'நெஞ்சத்தில் காதலில்லாத பொதுப்பெண்டிரது சேர்க்கையில் என்னுடைய மாலை துவளுவதாக' என்று குறிப்பிடுகிறான்" (சண்முகம்பிள்ளை :2004: ப-328) என்றவாறு பரத்தைமை குறித்து சண்முகம்பிள்ளை கூறியுள்ளார் .

"வருந்தப் போரேஎன் ஆயின் பொருந்திய

தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்

பல இருங் கூந்தல் மகளிர்

ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே" **(புறம்: 73: (11-41)7**

எனும் பாடல் சமூகத்தில் பரத்தைமையின் நிலையைக் காட்டுகின்றது. கொடுமை, ஒழுக்கம், பேணா ஒழுக்கம், கிழவோன் கொடுமை, பிழைத்துவந்த கிழவன் எனும் சொற்கள் பெண்டிரால் வெறுப்புக்குரியதாக கருதப்பட்டிருந்ததை காட்டுகின்றன" (பெ. மாதையன்: 2010: ப-128), தொல்காப்பியரும் இதனை,

"கொடுமை ஒழுக்கான கோடல் வேண்டி

அடிமேல் வீழ்ந்த கிழவனை" **(தொல்:147:28-29)**

எனும் நூற்பாவின் வழி குறிப்பிடுகின்றார். இவ்வாறு அரசும், மக்களும், புலவரும் வெறுத்த, கொடுமை ஒழுக்கமான பரத்தைமையைச் சமூகத்திலிருந்து ஒழிக்க வேண்டும் என்பதனையே அஞ்சில் அஞ்சியார் பாடலும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

மக்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி சமூகமாக நிலைப்பட்ட காலத்திலிருந்தே சமூக நெறிமுறைகளும், விழுமியங்களும் உருவாக்கத் தொடங்கிவிட்டன. தமிழ் சமூகத்தில் களவு, கற்பாக மாறுவதே அறச்செயலாக கருதப்பட்டது. தமிழ் சமூகத்தில் களவு மூன்று படிநிலைகளில் நிகழ்கின்றது. முதலாவது,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்

ஒன்றி உயர்ந்த பாலது அணையின்" **(தொல்:பொ: நூ: 91)**

என்று தொல்காப்பியர், களவு என்பது ஆணும் பெண்ணும் விதியின் காரணமாக ஒருவரை ஒருவர் முதற்கண் காணும்பொழுது களவு ஏற்படுகின்றது என்கிறார். இரண்டாவதாக தலைவி தினைப்புனம் காவல் காப்பதற்காக செல்லுமிடத்தும், தோழிகளுடன் விளையாடும் பொழுது ஏற்படும் இடர்களிலிருந்து தலைவியைக் காக்கும் தலைவனுக்கும், தலைவிக்கும் நட்பு தோன்றி மலர்கின்றது. தலைவன், தலைவியைப் பல நாட்கள் பின்தொடர்ந்து நன்மொழி பேசி, தன்னைப் பற்றிய நேர்மறையான எண்ணத்தை ஏற்படுத்தி, அவளின் நெஞ்சத்தை நெகிழச் செய்து காதலிக்க வைப்பது மூன்றாவது வகையாகும்.

வருமுலையாரத்தியார் பாடல் மூன்றாவது வகையைச் சார்ந்த அகப்பாடலாகும். ஒரு பெண், தன்னைக் காதலிக்க வேண்டும் என்பதற்காக, அவளைப் பல நாட்கள் பின்தொடர்ந்து, கட்டாயப்படுத்தி காதலிக்க வைக்கும் ஒரு ஆணின் நிலைப்பாடு இப்பாடல் வழியாக வெளிப்படுகின்றது. இச்செயல்பாட்டிற்கு பிறகும் தலைவி தலைவனுக்கு விடை கூறவில்லையென்றால், அவன் தோழியை நாடுகின்றான். தலைவன் மீது தோழிக்கு நன்மதிப்பு ஏற்பட, அதனால் தோழி, தலைவியிடம் தலைவனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறாள். இதனை

"ஒரு நாள் வாரலன் இருநாள் வாரலன்

பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்

நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை

வரைமுதிர் தேனிற் போகியோனே

ஆஷா கெந்தை யாண்டுளன் கொல்லோ

வேறுபுல னன்னாட்டு பெய்த

ஏறுடை மழையிற் கலிழும் என்னெஞ்சே" **(குறுந்தொகை : பா-176)**

எனும் குறுந்தொகை பாடல் குறிப்பிடுகின்றது . மேலும் இதனை "ஒரு நாள் வந்தனாலன், இரண்டு நாள் வந்தனாலன், பற்பல நாளும் என்பால் வந்து பணிவுடைய மொழிகளைப் பலநாளும் சொல்லி, எனது நன்மையுடைய நெஞ்சத்தை இளகச் செய்த பின்னர், மலையின் கண் முதிர்ந்த தேனிநாலை போன்று மனம் அழித்து சென்றான்" (பொ.வே.சோமசுந்தரனார்: 2008: பக்- 315,316) எனும் உரைக்கருத்தும் தெளிவுபடுத்துகின்றது. தொல்காப்பியர் குறிப்பிடும் விதியின் வழியால் ஏற்படும் காதல் ஒருபுறமிருக்க, ஒரு ஆணின் விருப்பத்தை, ஒரு பெண் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனும் நோக்கில் தொடர்ச்சியாக பல இடர்களைத் தரும் ஆணின் இச்செயல்பாடானது அக்காலச் சமூக சிக்கலாக வெளிப்பட்டது நிற்கின்றது. சமூகத்தில் களவு எனும் பெயரில் ஆணால் பெண்ணுக்கு ஏற்படும் துன்பத்தை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளும் நோக்கில் வருமுலையாரத்தியாரால் இப்பாடல் படைக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

சங்ககால தமிழ் சமூகத்தின் சமூக சிக்கலாக வெளிப்படும் பரத்தமை எதிர்ப்பும், கட்டாயப்படுத்தி காதலை ஏற்றுக்கொள்ள வைப்பதும் என அஞ்சில் அஞ்சியார் வருமுலையாரத்தியார் ஆகிய இருவரின் பாடல்கள் அக்காலச் சமூகத்தின் சமூக செயல்பாட்டை காட்சிப்படுத்தியுள்ளது. பாண்டிய மன்னன் அவைக்குச் சென்று நீதி கேட்கும் உரிமையைப் பெற்ற சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி கண்ணகியைப் போன்ற பெண்களுக்கு முன்னோடியாக அஞ்சில் அஞ்சியார் விளங்கியுள்ளார். சமூகத்தில் பண்பாடு என்பது ஒழுக்க நெறிமுறைகளோடு தொடர்புடையது என்பதால் பரத்தமையைச் சமூகத்தில் இருந்து ஒழிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். அதை செய்யத் தவறிய அரசு பயனற்றது என்று அரசை சாடும் உரிமையைப் புலவர்கள் பெற்றிருந்தனர் என்பதோடு, அரசின் பொறுப்பும் அஞ்சில் அஞ்சியாரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்விரு பெண்பாற் புலவர்களின் சமூகப்பார்வையானது ஆழ்நிலையிலிருந்து சிந்திக்க கூடியது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது

துணைநூற் பட்டியல்

1. தாயம்மாள் அறவாணன் -மகடூ முன்னிலை – பெண்புலவர் களஞ்சியம் -பச்சைப்பசேல் பதிப்பகம்-அமைந்தகரை, சென்னை – 29 - (பதிப்பு – 2004, ஆகஸ்ட்)

2. சண்முகம் பிள்ளை. மூ-சங்கத் தமிழர் வாழ்வியல் - உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் - தரமணி, சென்னை- 600013 - (பதிப்பு – 2004)

3. புலியூர் கேசிகன் (உ. ஆ) - புறநானூறு (மூலமும் உரையும்) - சாரதா பதிப்பகம் - சென்னை – 600014 - 2018 (ஆறாம் பதிப்பு)

4. மாதையன். பெ - சங்க இலக்கிய குடும்பம் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை – 600098

5. பாலசுப்பிரமணியன். கு. வெ -நற்றிணை (மூலமும் உரையும்) - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை – 600098

6. சிவதம்பி கார்த்திகேசு – பண்டைத் தமிழ்ச் சமூகம் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை – 600050 - (அக்டோபர் 2019)

7. சோமசுந்தரனார். பொ. வே -குறுந்தொகை - சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் - 522, டி. டி. கே சாலை - சென்னை – 18 - (பதிப்பு – 2008)

8. பாலசுப்பிரமணியன். கு. வெ -தொல்காப்பியம்(மூலமும் உரையும்) - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை – 600098 - (ஏப்ரல் 2019)

9. பக்தவத்சல பாரதி (உ. ஆ)- பண்பாட்டு மானுடவியல் - அடையாளம் பதிப்பகம் - 1205/1,கருப்பூர் சாலை – புத்தாநத்தம் - திருச்சி – 621310- 2018 (வி. பு . பதிப்பு)

References

1. *Thayammal Aravana - Magadhu Thalai - Women's Repository - Pachappasale Publication - Mudiyakarai, Chennai - 29 (Edition-2004, August)*

2. *Shanmugam. Moo Sangath Tamilar Biography - World Tamil Research Institute, Taramani, Chennai-600013 (Edition-2004)*

3. *Puliyur Kesigan (U.S. Purananuru (Source and Text) - Sarada Publications, Chennai-600014-2018 (6th Edition)*

4. *Mathaiyan Pe Sangam Literary Family - New Century Book House, Chennai-600098*

5. *Balasubramanian. K.V. Nattangalai (Source and Text) - New Century Book House, Chennai-600098*

6. *Sivathambi Karthiges - Ancient Tamil Society - New Century Book House, Chennai - 600050 - (October 2019)*

7. *Ve-Kurundhoki-Saivasiddhanta Printing Corporation-522, TTK Road-Chennai-18 (Edition-2008)*

8. *Balasubramanian K.V. Tholkappiyam (Source and Text) - New Century Book House, Chennai-600098 (April 2019)*

9. *Bhaktavatsala Bharati (U.S. b) Cultural Anthropology - Identity Press - 1205/1, Karuppur Road - Puthanatham - Trichy - 621310 - 2018 (V. B. the version)*

Cite this Article in English

Vasanthi V "Social Status During The Times of Sangam Female Poets Anchil Anjiyaar and Varumulaiyaaraththiyaar" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.2 Issue 1, January 2025, pp. 40-46*